Registered No. M. 5068.

ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0] ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள். [தனிப்பிரதி 0—2—0

மலர் 1 { சர்வதாரி௵ புரட்டாசி௴ 19௳ 4—10—1948 ஹிஜிரி 1367 துல்கஃதா௴ 30௳ திங்கட்கிழமை. } இதழ் 36

அவசியமில்லாத கிளர்ச்சி.

“ஹிந்துஸ்தானியே இந்தியாவின் தேசீய பாஷையாக இருப்பினும் அது பிரதேச பாஷைகளின் ஸ்தானத்தைவகிக்கமுடியாது அதன்மூலம் மாகாணங்களில் கல்வி புகட்டுவதும் கூடாது. இந்நிலையில் ஆங்கிலம் பற்றிய பிரச்னையே எழுவதற்கில்லை. ஆங்கிலத்தின் மூலம் கல்வி புகட்டுவதென்பது எவ்விதத்திலும் சாத்தியமில்லை. இந்தியாவுடன் தங்களுக்குள்ள தொடர்பை இந்தியர்கள் உணருவதே ஹிந்துஸ்தானியின் நோக்கம்.”

—மகாத்மா காந்திஜி

பிரார்த்தனைக் கூட்டம் 28-1-48.

தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பியதிலிருந்து இந்தியாவுக்கு ஒரு தேசீய பாஷை அவசியமென்று பாபூஜி வற்புறுத்தி வந்தார். இந்தியாவிலுள்ள எல்லா சர்வகலாசாலைகளின் அத்தியட்சகர்களும், பட்டதாரிகளும் வார்தாவில் கூடியபோது ஹிந்துஸ்தானியே தேசீய பாஷையாக இருக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. அந்த முடிவை காந்திஜியும் ஏற்றார். தன்னுடைய மறைவுக்கு இரண்டு தினங்களுக்கு முன்பும் பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜீ ஹிந்துஸ்தானியைக் குறித்து மேற்கண்டவாறு பேசினார்.

துரதிர்ஷ்ட வசமாக இன்று தமிழ்நாட்டின் ஒரு சில இடங்களில் திராவிடக் கழகத் தோழர்கள் ஹிந்துஸ்தானியை எதிர்த்து கிளர்ச்சி செய்து வருகின்றனர். ஹிந்துஸ்தானி படிப்பதால் ‘தமிழுக்கு ஆபத்து’ என்று சொல்லுகின்றனர். பள்ளிக்கூடங்களின் எல்லா பாடங்களும் ஆங்கிலத்திலேயே போதிக்கப்பட்டுவந்த அக்காலத்தில் ‘தமிழுக்கு ஆபத்து’ என்று தோழர்கள் உணராமலிருந்ததைக் குறித்து ஆச்சரியப் படாமலிருக்க முடியவில்லை.

இன்று சர்க்கார் தமிழுக்கு முதல் ஸ்தானம் கொடுத்திருக்கிறது. இனி பாடங்கள் அனைத்தும் தமிழிலேயே போதிக்கப்படும் மஹாத்மா காந்திஜீயும் இதைத்தான் வற்புறுத்தினார். ஹிந்துஸ்தானி இஷ்டப்பாடமாகவே வைக்கப்பட்டிருக்கிறது இந்நிலையில் ‘தமிழுக்கு ஆபத்து’ என்று வீண் கூச்சல் போடுவதற்கு இடமில்லை 1938 ல் ராஜகோபாலாச்சாரியார் மந்திரி சபை காலத்தில் “கட்டாய ஹிந்தி வேண்டாம். இஷ்டப்பாடமாக இருக்கட்டும்” என்று கிளர்ச்சி செய்தவர்கள் இன்று ‘ஹிந்துஸ்தானி ஒழிக” என்று கோஷமிடுவது அர்த்தமற்றதாகும்.

இன்று தோழர்களின் கிளர்ச்சி வெறும் மொழி சம்பந்தப்பட்ட கிளர்ச்சி மட்டும் அல்ல. அரசியல் நோக்கங்களை அடிப்படையில் கொண்டதாகும். லீக் மேடையில் மிஸ்டர் ஜின்னாவின் பாகிஸ்தான் கோரிக்கையை ஆதரித்துப்பேசி பாகிஸ்தானை வாங்கிக் கொடுத்தவர்கள் இன்று திராவிடஸ்தானை பெற்றுவிடலாம் என்று நம்புவதாகத் தெரிகிறது. இந்த பகற்கனவு நனவாகப் போவதில்லையென்பது நிச்சயம் இருப்பினும் மஹாத்மா காந்திஜீயின் அபார நம்பிக்கைக்கும் அன்புக்கும் பாத்திரமான தமிழ் நாட்டில் அவருடைய லட்சியமான ஹிந்துஸ்தானி எதிர்க்கப்படுவது வருந்தத்தக்க விஷயமாகும்.

ஒரு நாட்டின் ஐக்கியத்துக்காக தேசீய பாஷையின் அவசியத்தை உணர்த்துவதற்கு ஐரோப்பா ஒன்றே போதும். ஐரோப்பிய நாட்டினர் அனைவரும் ஒரே மதத்தினர்; ஒரே கலாசாரத்தினர்; ஒரே நிறத்

பாகிஸ்தான் பத்திரிகைகள்.

குற்றம் ருஜுவானால் என்னை சுடட்டும்.
ஷரீயத் ஆதரவாளர்கள் கைது செய்யப்படுகின்றனர்.
என்னையும் கைது செய்ய காரணம் கற்பிக்கப்படுகிறது. .... பீர்மான்கி ஷரீப்.

எல்லைப்பிரதமர் கான் அப்துல் கையூம்கானின் குற்றச் சாட்டுக்கு பீர்மான்கி ஷரீப் பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் கீழ்வருவாறு பதிலளித்தார்.

முஸ்லிம் லீகுக்கு எதிராக சதிசெய்வதில் ஈடுபட்டிருக்கும் எல்லைப் பிரதமர் என்மீது சாட்டியிருக்கும் அபாண்டத்தைப் பற்றிஒரு முடிவுக்கு வருமுன் புத்தியுள்ள எவரும் கீழ்க்கண்ட கேள்விகளை கேட்பர்.

1. பீர்மான்கிஷரீபுக்கு இஸ்லாம், பாகிஸ்தான், முஸ்லிம் லீகைவிட ஹிந்துக்களிடம் அதிகப்பற்று உண்டா?

2. பீர்மாங்கிஷரீபுக்கு எல்லைப் பிரதமரிடம் தனிப்பட்ட விரோதம் உண்டா?

3. பீர்மான்கிஷரீபுக்கு மந்திரியாகவோ அல்லது பிரதமராகவோ இருக்க வேண்டுமென்று ஆசையுண்டா?

இம் மூன்று கேள்விகளுக்கும் இல்லையென்ற பதில் கிடைப்பது நிச்சயம்.

அன்று செஞ்சட்டையினருக்கு எதிராக பத்வாக்கள் விடுத்து தன்னைச் சேர்ந்தவர்கள் கிளர்ச்சியில் கலந்து கொள்ளாதபடி என்தந்தை விலக்கி வைத்திருந்தார். பிறகு எல்லைப் புரத்தில் காங்கிரஸ்

தினர் ; ஒரே நாகரீகத்தினர் ; ஒரு ஜெர்மனியனுக்கும் ஆங்கிலேயனுக்குமிடையே எவ்விதமான வித்தியாசத்தையும் காட்டமுடியாது. ஒரு பிரெஞ்சுக்காரனுக்கும் இத்தாலியனுக்குமிடையே நடை, உடை, பாவனையில் வேறுபாட்டை கண்டுபிடிக்க முடியாது. இருந்தும் உலகத்தை சர்வநாசத்தில் ஆழ்த்தும் பயங்கர யுத்தங்கள் ஐரோப்பாவில் மூளுவதற்கு காரணமென்ன? எல்லா வகையிலும் ஒன்றுபட்டிருக்கும் ஐரோப்பியர்களிடையே யுத்தங்கள் மூளுவதற்கு இருந்து வரும் அடிப்படை வித்தியாசந்தானென்ன?

ஐரோப்பிய நாட்டினரிடையே ஏதாவது ஒரு வித்தியாசம் உண்டென்றால் மொழியைத் தவிர வேறொன்றும் இருக்க முடியாது. எனவே ஐரோப்பியர்களிடையே பயங்கர யுத்தங்கள் மூளுவதற்கு மொழி வேற்றுமைதான் காரணமென்பதை யாரும் மறக்க முடியாது. பொருளாதார, ராஜீய வேற்றுமை காரணங்களென்று சிலர் வாதிக்கலாம் அப்படியாயின் அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்குமிடையே யுத்தம் ஏற்படாமலிருப்பதற்கு காரணமென்ன? அவ்விரு நாடுகளிடையே பொருளாதார, ராஜீய வேற்றுமைகள் இல்லையா? இருக்கத்தான் செய்கின்றன. அமெரிக்கர்களும் பிரிட்டிஷ்காரர்களும் ஒரே பாஷை பேசுவதால் அவர்களிடையே யுத்தம் ஏற்படுவதில்லையென்ற வாதத்தை யாரும் மறுக்கமுடியாது.

ஐரோப்பாவில் பேசப்படும் பாஷைகளை விட எத்தனையோ அதிகமான பாஷைகள் இந்தியாவில் பேசப்படுகின்றன. மொழி வேற்றுமையால் இந்தியா எதிர்காலத்தில் பாதிக்கப்படாமலிருக்குமென்று யாரும் சொல்லமுடியாது. எனவே அவ்வித அபாயத்தை தடுப்பதற்காக, உலகத்தை சர்வ நாசத்தில் ஆழ்த்தும் பயங்கர யுத்தங்கள் இந்தியாவிலும் மூளாமலிருப்பதற்காக, இந்தியாவின் ஐக்கியத்தை காப்பதற்காக, இந்திய சுதந்திரத்தை பாதுகாப்பதற்காக, இந்தியாவுக்கு ஒரு பொது பாஷை அவசியம்.

ஜனநாயகம் பேசும் இன்றைய உலகில் இந்தியாவின் பொது பாஷை எதுவாக இருக்க முடியும்? தமிழ் ஒரு சிறந்த பாஷை என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் தமிழ் பேசுபவர்களின் எண்ணிக்கை என்ன? அதை இந்தியாவின் தேசீய பாஷையாக்க முடியுமா? அது ஜனநாயகத்திற்குத்தான் பொருந்துமா? இந் நிலையில் இந்த நாட்டின் பெருவாரியான மக்கள் பேசக்கூடிய ஒரு பாஷைக்குத்தான் தேசீய பாஷையின் ஸ்தானத்தைக் கொடுக்க முடியும்.

எனவே தேசீய பாஷை ஹிந்துஸ்தானியாக வைக்கப்பட்டிருக்கிறது பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் உற்சாகத்துடன் படிக்கின்றனர். அதை எதிர்த்து நடத்தும் கிளர்ச்சியை கைவிடும்படி தோழர்களை கேட்டுக் கொள்ளுகிறோம்.

பாபூஜியின் லட்சியங்களை உலகம் பூராவிலும் பரப்பும் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கும் இந்தியர்களாகிய நாம் முதலில் அவருடைய லட்சியங்களை மதித்து நடந்து கொள்வோமாக!

மந்திரிசபை ஏற்பட்ட போது மத்திய சட்ட சபையில் காங்கிரஸ் அங்கத்தினராயிருந்த கான் அப்துல் கையூம்கான் தன் புஸ்தகத்தில் காய்தே ஆஜமுக்கு எதிராக கண்ணியக் குறைவான வார்த்தைகளை எழுதிக்கொண்டிருந்தார். அச்சமயத்திலும் நான் செஞ்சட்டையினருக்கு எதிராக பத்வாக்கள் வெளியிட்டு பட்டாணியர்களை கிளர்ச்சியிலிருந்து ஒதுக்கி வைத்திருந்தேன். அதனால் எல்லையில் முஸ்லிம் லீக் வளர்ச்சியடைந்து சிவில் சட்ட மறுப்பு, பொதுஜன வாக்கெடுப்பில் வெற்றி கிடைத்தது. செஞ்சட்டையினர் கிளர்ச்சியை 'ஹராம்' என்று அன்றும் பத்வா கொடுத்தேன். இன்றைக்கும் அப்படியே நம்புகிறேன். கான் அப்துல் கபார்கானும் அவருடைய கட்சியும் என்னை மிகப்பெரிய எதிரியாக பாவிப்பதற்கு அதுதான் காரணம்.

தனிப்பட்ட விரோதம் எனக்கிருப்பதாக கான் அப்துல் கையூம்கான் எவ்வித ஆதாரமும் காட்ட முடியாது. அதற்கு மாறாக என்னிடம் தஸ்தாவேஜுகள் இருக்கின்றன. மந்திரிசபை அமைவதற்கு முன்பே சட்டசபை லீக் அங்கத்தினர்களில் பெரும்பான்மையினர் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து தலைமைப் பதவியிலிருந்து கான் அப்துல் கையூம்கானை விலக்கிவிட விரும்பினர். அச்சமயத்தில் "நேர்மையுடன் முஸ்லிம்களுக்கு சேவை செய்ய சித்தமாயிருப்பதாக" எழுத்து மூலம் பிரமாணம் பெற்றுக்கொண்டு இதர மெம்பர்களுக்கும் அவருக்குமிடையே சமரஸம் செய்துவைத்து அப்துல் கையூம்கானை பிரதம மந்திரி பதவியில் அமர்த்த உதவி செய்தேன்.

மூன்றாவது கேள்விக்கு பாகிஸ்தான் பிரதம மந்திரி எனக்கு எழுதிய கடிதம் பதிலளிக்கின்றது. நான் இரண்டு முறை மந்திரி பதவியை நிராகரித்திருப்பதும் என்மீது பதவி மோகக்குற்றம் சாட்டுபவர்கள் பாகிஸ்தான் நலத்தை விரும்பக்கூடியவர்களல்லவென்பதும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பாகிஸ்தானில் இஸ்லாமிய ஆட்சி ஏற்பட வேண்டுமென்றும் எல்லை மாகாண மந்திரிசபை மாகாண லீக்குக்கு கட்டுப்பட்டிருக்க வேண்டுமென்றும் கேட்க ஆரம்பித்ததிலிருந்து குறுகிய நோக்கமுள்ள அப்துல் கையூம் என்னை தன்னுடைய நவாப் தர்பாரின் எதிரியாக பாவித்து வருகிறார். உண்மையில் என்னுடைய கோரிக்கை இஸ்லாமுக்காக தியாகம் செய்தவர்களுக்கு நம்பிக்கை ஊட்டியிருக்கிறது. முஸ்லிம் லீகுக்குள்ளேயே இஸ்லாமிய ஆட்சியை வற்புறுத்துபவர்கள் இருப்பதைப் பார்த்து அவர்கள் ஆறுதலடைகின்றனர் இல்லையேல் இதுவரை அவர்கள் சர்க்காருக்கு எதிரான சக்திகளுடன் சேர்ந்திருப்பர்.

மேடைகளில் காய்தே ஆஜமும், லியாகத் அலியும் அடிக்கடி பிரஸ்தாபித்துவந்த இஸ்லாமிய ஆட்சிக்கு மக்களுடைய ஆதரவு திரட்டுவதன் மூலம் நான் பாகிஸ்தானுக்கு செய்துவரும் சேவையை அறிவாளிகள் உணர்வர்.

செஞ்சட்டையினரை ஆதரிப்பதாக என்மீது குற்றஞ்சாட்டியதிலிருந்து குறுகிய மனப்பான்மையும் கெட்ட எண்ணமும் கொண்ட அப்துல் கையூம் விரும்புவது என்னவென்று விளங்குகின்றது. ஷரீயத் ஆதரவாளர்களும், கான் குலாம் முஹம்மத்கான் போன்ற சுயநலமற்ற லீக் ஊழியர்களும் கூட நிர்மாணத்துறையில் சர்க்காரிலிருக்கும் குறைகளைச் சுட்டிக் காட்டியதால் அநேகர் ஐந்தாம் படையினர் என்று அறிவிக்கப்பட்டு சிறைக்குள் தள்ளப்படுகின்றனர். பொய்க் குற்றங்களைக் கற்பித்து என்னையும் கைது செய்ய முயற்சிகள் நடப்பது எனக்குத் தெரியும். ஷரீயத் ஆதரவாளர்களும் சர்க்காரிலிருக்கும் குறைகளை எடுத்துக்காட்டுபவர்களும் வரும் தேர்தல்களில் போட்டியிட முடியாமல் செய்வதே இதன் நோக்கம். இதனால் தனிப்பட்ட முறையில் அப்துல் கையூமுக்கு நன்மை ஏற்படலாம். ஆனால் பாகிஸ்தானுக்கு பெரும் தீமையே ஏற்படும்.

ஆகையால் வங்காள பிரதம நீதிபதி தலைமையின் கீழ் ஸிந்து, எல்லைப்புரம், பஞ்சாப் பிரதம நீதிபதிகளின் டிரிபியூனல் ஒன்று அமைத்து என்மீது சாட்டப்பட்டிருக்கும் குற்றங்களை விசாரிக்கட்டும். குற்றங்கள் ருஜுவானால் என்னை சுட்டுத் தள்ளட்டும். அதற்கு மாறாக மிஸ்டர் குர்ரோ மீது நடவடிக்கை எடுக்கக் காரணமாயிருந்த குற்றங்களும், காஷ்மீர் யுத்தத்துக்கு பெரும் தீங்கு செய்த குற்றமும் அப்துல் கையூம் கான் மீது ருசுவானால் அவருக்கு படிப்பினைக் குறிய தண்டனை விதிக்கப்படட்டும்.........

காஷ்மீர்

காஷ்மீர் புனிதப் போரைக் குறித்து பொதுக் கூட்டங்களிலும் ஆஸாத் காஷ்மீர் ரேடியோ நிலையத்திலிருந்தும் பன்முறை பத்வா பிரகடனம் செய்திருக்கிறேன். காஷ்மீரில் நடப்பது ஆண்டவனுக்காக நடக்கும் புனித யுத்தம். போர்க்களத்தில் கலந்து கொள்ள முடியாதவர்கள் போராடும் வீரர்களுக்கு சாத்தியமான எல்லா உதவியும் செய்ய வேண்டியது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் கடமை. அப்படிச் செய்வதும் புனித யுத்தமேயாகும்.

[10-ம் பக்கம் பார்க்க.]

ஆஸாத்

தமிழ் தேசிய வாரப் பத்திரிகை.

மலர் 1 } 4—10—'48 திங்கட்கிழமை { இதழ் 36

துரோகிகள் எங்கே?

முஸ்லிம்களா! துரோகிகள்; விஸ்வாஸமற்றவர்கள்; எதிரி ஏஜெண்டுகள்; உளவாளிகள்; ஹைதராபாத், பாகிஸ்தான் அனுதாபிகள்; சமயம் வரும்போது மறைத்து வைத்திருக்கும் ஆயுதங்களைத்தாங்கி உள்நாட்டு சமாதானம், அமைதியைக் குலைக்க காத்துக்கொண்டிருக்கின்றனர். நேற்றுவரை நாலரைகோடி முஸ்லிம்களைக் குறித்து பொதுவாக நிலவிய அபிப்பிராயம் இதுதான். ஆயினும், முஸ்லிம்களில் பெரும்பான்மையோர் விஸ்வாஸிகளென்றும் முஸ்லிமல்லாதாரில் பெரும்பான்மையோர் அவிஸ்வாஸிகளென்றும் உண்மையை அஞ்சாது எடுத்துரைக்கும் பண்டித ஜவஹர்லால் நேரு இந்தியப் பார்லிமெண்டில் பட்டவர்த்தனமாகப் பேசினர். முஸ்லிம்களிடம் விஸ்வாஸத்தைக் கோருவது சரியல்லவென்று சென்னைக் கூட்டத்தில் கண்டித்தார். இருப்பினும் தலைவர்களில் அநேகர் தவறான எண்ணத்திலேயே இருந்து வந்தனர். முஸ்லிம்களிடம் நல்லதை எதிர்பார்க்க முடியாது; முஸ்லிம் ஆட்சியைத் தவிர வேறெந்த ஆட்சியிடமும் அவர்களுக்கு விஸ்வாஸ மிருக்காது; சூழ்ச்சி செய்து, இந்திய யூனியனைக் கவிழ்க்கவே பார்க்கின்றனர் என்று சந்தேகித்தனர்.

நாலா பக்கங்களிலிருந்தும் கோரிக்கைகள் பறந்தன. முஸ்லிம்களை நம்ப முடியாது; அவர்களை கண்காணிக்க வேண்டும்; கைது செய்து சிறைக்குள் தள்ள வேண்டும்; என்று சிலர் வற்புறுத்தினார்கள். முஸ்லிம்கள் விஸ்வாஸிகளாக இருக்கவேண்டுமென்று கோரினர் சிலர். விஸ்வாஸப் பிரமாணங்களால் பிரயோஜன மில்லை; செயல் மூலம், தேசத்திற்காக தியாகம் செய்ய தயாராயிருப்பதன் மூலமே முஸ்லிம்கள் தங்கள் விஸ்வாஸத்தை காட்டவேண்டும் என்றனர் இன்னும் சிலர்.

இதற்கிடையில் ஹைதராபாத் விஷயம் ஆரம்பித்தது. இந்தியாவின் 'போலீஸ் நடவடிக்கை' வெற்றியில் முடிந்தது. இச்சந்தர்ப்பத்தில் முஸ்லிம்கள் செய்ததென்ன? ஹைதராபாத்தை ஆதரித்து புறப்பட்ட ஊர்வலங்கள், நடந்த கூட்டங்கள் எத்தனை? வெளிவந்த அறிக்கைகள், ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் எத்தனை? எங்கெந்த இடங்களில் பலாத்கார ஆர்ப்பாட்டங்கள் நடந்தன! எத்தனை ஆயுத உற்பத்தி சாலைகள் கண்டுபிடிக்கப்பட்டன? அமைதியைக் குலைத்து உள்நாட்டு நிர்வாகத்தை ஸ்தம்பிக்கச் செய்யும் சூழ்ச்சியில் ஈடுபட்டிருந்த அன்னிய உளவாளிகள் எத்தனை பேர்?

நெருக்கடியான இக்கட்டத்தில் 'இந்திய துரோகிகள்' என்று சந்தேகிக்கப்பட்டவர்கள் அனுசரித்த கவுரவமான போக்கை நாம் பெருமையுடன் பாராட்டுகிறோம். ஆதலால் இந்திய முஸல்மான்களைக் குறித்து தவறான பிரசாரம் செய்வதே தொழிலாகக் கொண்டிருந்தவர்கள் வெட்கித்தலை குனியும்படியான சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. இந்திய சர்க்காரின் போலீஸ் நடவடிக்கையை ஆதரித்தது மட்டுமின்றி அதன் வெற்றியை இந்திய முஸல்மான்கள் மனப்பூர்வமாய் கொண்டாடவும் செய்தனர். நிஜாம் நேர்வழிக்கு வந்து, சச்சரவுகள் தீர்ந்து தங்களுக்கு விமோசனம் கிடைத்ததைக் குறித்து, முஸ்லிம்களின் ஸ்தாபனங்கள், சங்கங்கள், தலைவர்கள் அரசாங்கத்தின் நடவடிக்கையை பாராட்டிப் புகழ்ந்ததுடன் அதன் வெற்றியை தங்கள் வெற்றியாகவே பாவித்தனர். இது முஸ்லிம்களின் கடமையாக இருந்தது. அதை அவர்கள் சிறந்த முறையில் செய்துவிட்டனர். முஸ்லிம்கள் மீது சந்தேகம் கொள்பவர்களுக்கும் ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறோம். சுயமரியாதையுள்ள எந்த ஒரு சமூகமும் 'துரோகி' என்ற அவச்சொல்லை சகிக்காது. கேவலத்தை ஓரளவுக்குத்தான் சகிக்க முடியும். எப்பொழுதுமே கேவலத்தில் இருக்க முடியாது. உண்மையாகவே உள்ளங்களில் கல்மிஷம் இருந்திருந்தால் முஸ்லிம்கள் அதை மறைத்து வைத்திருக்க முடியாமல் போயிருக்கும். ஹைதராபாத் விஷயத்தில் முஸ்லிம்கள் தங்கள் உண்மையான நிலையை தெளிவாக்கியிருக்கின்றனர். எதுவாக வேண்டுமாயினும் இருக்கலாம்; ஆனால் முஸ்லிம்கள் தேசத்துரோகிகள், அவிஸ்வாஸிகள், அன்னியர்களின் ஐந்தாம் படையினராக மட்டும் இருக்க முடியாதென்பதை நிரூபித்துக் காட்டி விட்டனர். இதை அரசாங்கமும் நன்றாக உணர்ந்து விட்டது. எனவே இனி துரோகிகள் என்ற அவச்சொல்லை நம்மால் சகித்துக் கொண்டிருக்க முடியாதென்பதை சொல்லுகிறோம். நம்முடைய

செய்தி உலகம்.

பாகிஸ்தானில் ரஸாக்கர் படை

கராச்சி, செப். 26.—

பாகிஸ்தான் உள்நாட்டு மந்திரி காஜா ஷஹாபுத்தீன் பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் பேசியதாவது:—

“பாகிஸ்தானில் ஒவ்வொரு மாகாணத்திலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆரம்பித்துவிட்டது. மேலும் ஒரு ரஸாக்கர் படையும் திரட்டப்பட்டிருக்கிறது. இந்த ரஸாக்கர் படையில் பாகிஸ்தான் முஸ்லிம்கள் சேர்க்கப்பட்டு வருகிறார்கள். வதந்திகளைப் பரப்பும் ஐந்தாம்படை பேர்வழிகளை நம்பக்கூடாது. அதிகாரிகளுடன் ஒத்துழைத்து வருங்காலத்தில் எவ்வித நிலைமையையும் சமாளிக்க உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார், கேள்விகளுக்கு பதிலளிக்கையில் கூறியதாவது:— சிந்து வாசிகளுக்கும் அகதிகளுக்குமிடையே நல்லுறவு ஏற்பட்டுவருகிறது. காலத்தின் போக்கு சாதகமாயிருக்குமானால் இன்னும் இரண்டு லட்சம் அகதிகள் சிந்து மாகாணத்தில் இடம் பெறலாம் இந்திய அரசாங்கம் 9,000 முஸ்லிம் பெண்களை மீட்டி அனுப்பியிருக்கின்றது. பாகிஸ்தான் அரசாங்கம் 6,000 ஹிந்து பெண்களை மீட்டி இந்தியாவுக்கு அனுப்பியிருக்கின்றது. காய்தே ஆஜமின் மறைவுக்குப் பிறகு கடைத் தெருக்கள், ஹோட்டல்கள், மற்ற பொதுஸ்தலங்களில் வதந்திகளைப் பரப்பி வரும் பேர்வழிகள் ஒரு புது நெருக்கடியை சிருஷ்டி செய்ய முயற்சிக்கின்றார்கள். அது நமது கவர்மெண்டை கவிழ்க்க நடக்கும் ஒரு பெரிய சூழ்ச்சியாகும். நமது விரோதிகள் நமது தலைவர்களையும் ஏன்? அவர்களது மனைவிமார்களைப் பற்றிகூட விதம் விதமான பொய் செய்திகளை பரப்பி நாம் அவர்களிடம் வைத்திருக்கும் நம்பிக்கையை குலைக்க முயற்சிக்கிறார்கள். ஆயினும் பொதுமக்கள் தைரியத்துடன் இருந்ததை பாராட்டுகிறேன். ரஸாக்கர் படை ஒவ்வொரு ஊரிலும் இருக்கும். கராச்சியில் மாத்திரம் 50,000 ரஸாக்கார்கள் இருந்து வருவார்கள் .ஏ. ஆர். பி சேவையுடன். போலீஸாருக்கும் உதவியாக இருந்து வருவார்கள் என்று அறிவித்தார்.

அகாலி தளக்கொடி
செங்கோட்டையின்மேல் பறக்குமாம்!
ரஸ்விக்குப் பிறகு தாராசிங்

கிழக்கு பாஞ்சாலத்திலுள்ள பட்டின்டாவில் 26 அகாலி தளங்கள் சார்பாக தாக்கீஸ் மைதானத்தில் மாஸ்டர் தாராசிங் தலைமையில் அகாலிகள் மஹாநாடு நடைபெற்றது. சர்தார் பிரேம் சிங், குஹர் சிங், பைராகி, மாஸ்டர் தாரா சிங் இன்னும் பிரபல சீக்கிய தலைவர்கள் பேசினார்கள். தாராசிங் பேசியதாவது:-

காங்கிரஸ் ஒரு வகுப்புவாத ஹிந்து சபையாகும். நான் எப்பொழுதும் காங்கிரஸிற்கு விரோதமாகவே

விஸ்வாஸத்தை சந்தேகிப்பதால் நாட்டுக்கு நன்மையில்லை. இதுவரை நாம் அநேக இழிவுச்சொற்களை சகித்தாய் விட்டது. அப்படி பேசுபவர்கள் விழிப்படைய வேண்டும். விஸ்வாஸிகளை துரோகிகள் என்பதும் கண்ணிய முள்ளவர்களை கேவலப்படுத்துவதும் நேர்மையல்ல. சிறுபான்மையினரை கேவலமாக மதிப்பது பெரும்பான்மையினருக்கு அழகல்ல. அதனால் நன்மை ஏற்பட முடியாது. எனவே பெரும்பான்மையினரில் தவறிச்செல்லும் சிலர் தங்களுடைய போக்கை மாற்றிக்கொள்ள வேண்டும். இச்சந்தர்ப்பத்தில் முஸ்லிம்களுக்கும் ஒரு விஷயத்தை அறிவுறுத்த விரும்புகிறோம். முஸ்லிம்கள் தங்கள் கடமைகளை உணரவேண்டும். பீதி அவநம்பிக்கையை போக்க வேண்டும். ஆண்டவனிடம் உறுதியைக் கொண்டு இஸ்லாமிய உயரிய போதனைகளை கடைப்பிடிக்க வேண்டும். உண்மை முஸ்லிம்களுக்கு அழிவு இல்லை. தெய்வ சம்மதத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து இஸ்லாமின் வழியே நடப்பவன் கேவலத்துக்காளாக மாட்டான். முஸ்லிம்கள் முஸ்லிம்களாக இருந்தால் எந்த சக்தியும் அவர்களை அழித்துவிட முடியாது நாம் இஸ்லாமைக் காப்பாற்றினால் இஸ்லாம் நம்மைக் காப்பாற்றும். ஆண்டவனால் படைக்கப்பட்ட மக்களிடம் அன்புகொண்டு சகிப்புத்தன்மையை இழக்காமல் நியாயத்தையும் தர்மத்தையும் கைவிடாமலிருக்க வேண்டும் மஹாத்மா காந்திஜீ இதை வெகு அழகாக கீழ் வருமாறு எடுத்துக் காட்டியுள்ளார்.

“பாகிஸ்தான் பெரும்பான்மை முஸ்லிம்களை விட்டுப் பிரிந்து இந்திய முஸ்லிம்கள் இன்று சிறுபான்மையினராகிவிட்டனர். இருப்பினும் அஹிம்சையை கடைப்பிடித்தால் இன்றைய மாறுபட்ட நிலைமையில் அவர்களுக்கு எவ்வித தீங்கும் ஏற்பட முடியாது. எவ்வளவுதான் சிறுபான்மையினராக இருப்பினும் அவர்களுடைய சமூக வாழ்க்கை பாதிக்கப்படமாட்டாது. தன்னை சிருஷ்டித்த நாயனை உணர்ந்த பிறகு ஒருவனின் சுயமரியாதையை யாராலும் பறிக்க முடியாத நிலையில் இயற்கையாகவே மனிதன் சிருஷ்டிக்கப்படுகிறான்.”

இருந்திருக்கிறேன். அது சீக்கியர்களை நசுக்க முயற்சிக்கிறது. காங்கிரஸ் தலைவர்கள் பாட்டியாலா மஹாராஜாவை தந்திரமாக கையில் போட்டுக்கொண்டு சீக்கியர்களையும், அவர்கள் இருப்பிடமான பஞ்சாபையும் நசுக்க முற்பட்டிருக்கின்றனர். பண்டித நேருவும் படேலும் தாடியுடைய சீக்கியர்களை நசுக்கிவிடலாமென்று எண்ணுகின்றார்கள். ஜவஹர்லால் ஒரு வகுப்புவாதியல்லவென்று நமக்குத்தெரியும். சக்கரவர்த்தி ஔரங்கசீப்பினால் கூட சீக்கியர்களை நசுக்க முடியவில்லை. என்றால் காங்கிரஸ் எம்மாத்திரம்? ஹிந்துக்களிடையே காங்கிரஸின் செல்வாக்கு குறைந்து வருகிறது. அதில் சேரும் சீக்கியர்கள் சமூக துரோகிகளாவர். கோபிசந்த் பார்க்கவா ஒரு வகுப்புவாதி. அவர் பஞ்சாப் பாஷைக்கு பதிலாக ஹிந்தியைப் புகுத்த முயற்சிக்கிறார். பஞ்சாபுக்கு ஒரு சீக்கியன் கவர்னராக வரவேண்டும். சர்தார் சுவர்ணசிங், சர்தார் கியானி கர்தார்சிங் காங்கிரஸில் இருக்கின்றனர் எனக்கும் அவர்களுக்கும் அபிப்பிராயபேதமுண்டு. அவர்கள் சீக்கியர்களுக்கும், காங்கிரஸிற்கும் நல்லுறவு ஏற்படுத்த முயற்சி செய்கின்றார்கள். ஆனால் எந்த வகையிலும் அது சாத்தியமில்லை. தற்சமயம் இருக்கும் மந்திரிசபை பெரிய உத்தியோகங்களில் 22-ஹிந்துக்களையும் ஒரு சீக்கியனையும் நியமித்திருக்கிறது. வகுப்புவாதிகள் என்ற குற்றத்தை சாட்டி சீக்கியர்களை நசுக்க முற்படுகின்றனர். ஜின்னா இறந்துவிட்டார். பாகிஸ்தான் அலங்கோலமாகக்கிடக்கிறது. இந்த சமயத்தில் காங்கிரஸ் ஏன் பாகிஸ்தான் மீது படை யெடுக்கக்கூடாது? அப்படிச் செய்யாவிட்டால் பாகிஸ்தானிலிருந்து வந்த சீக்கிய, ஹிந்து அகதிகளுடன் நாங்களும் சேர்ந்து எடுக்கும் படையெடுப்பைத் தவிர்க்க முடியாது. அது நமக்கு ஆயுதங்கள் சப்ளை செய்யாவிட்டாலும் நமக்கு தயார் செய்து கொள்ள முடியும். பாகிஸ்தானை ஒழித்தபிறகுதான் நாம் நிம்மதியாக இருக்கமுடியும். "குரு கரந்த்" சாகிப் புஸ்தகத்தில் இந்தியாவில் சீக்கியக்கொடிபறக்கும் என்று எழுதப்பட்டிருக்கிறது.

பிறகு ஜந்தேதார் பூரன் சிங் பேசுகையில் செங்கோட்டையின்மேல் சீக்கியக்கொடி பறந்தே தீரும் என்று சொன்னார். சர்தார் பிரேம்சிங் பேசுகையில் காங்கிரஸ் பணக்கார கோஷ்டி யென்று குறை கூறினார். திக்கற்ற பாகிஸ்தான் நம்முடன்சேர்ந்தேதீரும்.

ஃ ஃ ஃ

டாக்டர் மஹ்மூது கர்ஜனை

பாட்னா செப். 23

பீஹார் கல்வி மந்திரி டாக்டர் சையது மஹ்மூது ஒருகூட்டத்தில் பேசுகையில் கூறியதாவது:—

"பாகிஸ்தானில் சேர்க்கப் பட்டிருக்கும் மாகாணங்கள் இன்று பிரிந்திருந்தாலும் இந்தியாவின் பலம் பொருந்திய அங்கங்களாக அமையப்போகும் நாள் தூரத்தில் இல்லை. உண்மையில் பிரிவினையே ஏற்படவில்லை. மனிதனால் இயற்கைக்கு விரோதமான பிரிவினையை செய்யமுடியாது. நம்மிடையே இயற்கைக்கு விரோதமாக பிரிவினை செய்யப்பட்டாலும் இரண்டு தேசங்களுக்கு மிடையே இருக்கும் ஒற்றுமை இன்னும் குலையவில்லை. இவ்விரண்டு பாகங்கள் எப்பொழுதும் பிரிந்தே இருக்கப் போவதில்லை. பிரிட்டிஷ் அரசாங்கம் பூரணசம்மதத்துடன் நமக்கு சுயராஜ்யம் கொடுத்துவிடவில்லை. நமக்கு சுதந்திரம் கொடுத்தாக வேண்டும் என்ற நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டவுடன் நமக்கு முன் ஆழமான குழிகளை தோண்டி நாம் அடைந்த சுதந்திரம் அந்த குழிகளில் விழுந்து பாழாகவேண்டும் என்ற துர்எண்ணத்துடன் நமக்கு சுதந்திரம் வழங்கினார்கள். காஷ்மீரும் ஹைதராபாதும் அந்த குழிகளை சேர்ந்தவைகள் என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். மேலும் பல பள்ளங்களை தாண்ட வேண்டியதாக இருக்கும்."

ஃ ஃ ஃ

ஜமீயத்துல் உலமா காரியக்கமிட்டி தீர்மானம்

டெல்லி செப். 24

ஜமீயத்துல் உலமா காரியக்கமிட்டியின் கூட்டம் மௌலானா ஹுஸைன் அஹமத் மதனி அவர்கள் தலைமையின் கீழ் கூடிற்று. முப்தி ஆஜம் முகம்மத் கிபாயத்துல்லா, மௌலானா முஹம்மது சயீத், மௌலானா அப்துல் சமத் ரஹ்மானி, மௌலானா நூருதீன் பிஹாரி, மௌலானா அப்துல் அலீம் சித்திகி, முப்தி அதீகுர் ரஹ்மான், மௌலானா பஷீர் அஹமத், அபுல் வபா, ஹிப்சுர் ரஹ்மான், ஸைய்யத்மியான், மிஸ்டர் ஹிலால் அஹமத் ஸுபைரி M. A., ஸையத் முஹம்மது ஜாபரி முதலியவர்கள் கலந்துகொண்டனர். கூட்டம் இரண்டு நாள் நடந்தது. கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:—

"ஹிந்துஸ்தானி பாஷை இரண்டு லிபிகளிலும் எழுதப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் பட்டது. சமீபத்தில் ஆக்ராவில் நடந்த கலகத்தைக் கண்டித்தும், பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுதாபம் தெரிவித்தும், விஷமிகள் கலகம் செய்யா வண்ணம் தடுக்கவும் இந்தியர்கள் பீதியின்றி வாழ வகை செய்யவும் சர்க்காரைக் கேட்டுக்கொண்டும், தங்கள் தாயகத்தை விட்டு ஓடாமல் முஸ்லிம்கள் சகிப்புத்தன்மையுடன் கஷ்டங்களை சமாளிக்க வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பாகிஸ்தானின் ஆடை உற்பத்தி

காந்திஜி சர்க்காவே கடைசி வழி.

மானிட வர்க்கத்துக்கு இரண்டுவிதமான தேவை இன்றியமையாதது. ஒன்று உணவு. மற்றொன்று ஆடை. மனிதனுடைய நாகரீகத்திற்கு ஆடைதான் ஜீவநாடி. உணவைவிட மானத்தைக்காக்க உடைதான் முக்கியம். மனிதன் தன்னுடைய தேவையை பூர்த்தி செய்வதற்காக பருத்தி விளைவித்து' நூற்று துணிநெய்வதற்கு ஆரம்பித்தான். தன்னுடைய தேவைக்கு ஏற்றவாறு இந்த தொழிலை விஸ்தரித்து நம்முடைய தேவையை பூர்த்திசெய்துவந்திருக்கிறோம். பாகிஸ்தான் ஏற்பட்டபிறகு நாமும் நம்முடைய மானத்தைக் காப்பாற்ற வேண்டிய வழிகளைப்பற்றி யோஜிக்க ஆரம்பித்திருக்கின்றோம். குறையை எப்படி தீர்ப்பது என்பது தான் இப்பொழுது நம் முன் உள்ள பிரச்னை. பாகிஸ்தானின் ஜனத்தொகை சுமார்பத்துகோடி. ஒவ்வொருவருக்கும் குறைந்தபட்சம் 18.கெஜம் துணி வைத்துக்கொண்டாலு வருஷத்தில் 18கோடிகெஜம் துணி தேவையாக இருக்கிறது. பாகிஸ்தான் பருத்தி விளைச்சலுக்கு பேர்பெற்ற இடமாக இருக்கிறது. பாகிஸ்தானில் விளையும் பருத்தியை நம் தேவையை பூர்த்தி செய்தபிறகும் 20-லட்சம்பேல்கள் அயல்நாடுகளுக்கு அனுப்பலாம்

பாகிஸ்தானில் நெசவு தொழில்

பாகிஸ்தானில் நான்கு மில்கள் இருக்கின்றன. இந்த நான்கு மில்களும் சேர்ந்து மொத்தம் நான்கு கோடி கெஜம் துணி உற்பத்தி செய்கின்றன. சர்க்காவின்மூலம் பெரிய முயற்சியின்பேரில் ஒன்பது கோடி கெஜம் துணி கிடைக்கலாம் தொண்ணூறு சதத்துக்கு மேல் துணிக்குறைவு நம்தேசத்தில் இருந்துவருகிறது மேற்கு பஞ்சாப் இரண்டு கோடி ஜனத் தொகை கொண்ட மாகாணம். அதற்கு மாத்திரம் 32-கோடி கெஜம் துணி தேவையாக இருக்கிறது, இந்த துணிக் குறைவை பூர்த்திசெய்ப பாகிஸ்தானுக்கு மூன்று வழிகள் இருக்கின்றன.

1. இறக்குமதி.
2. மில்கள் அமைப்பு.
3. கதர் உற்பத்தி.

1 இறக்குமதி.

பாகிஸ்தான் கவர்மெண்ட் 20-பேல் பருத்தியை இந்தியாவுக்கு கொடுத்து 12-பேல் துணியை வாங்கிக்கொள்ளுகிறது. இதன் மூலம் 3-கோடி கெஜம் துணி கிடைக்கிறது. ஒரு சிறிய அளவு கம்பளங்களை பெற ஆஸ்டிரேலியாவிடம் பேச்சு வார்த்தை நடந்து வருகிறது. அமெரிக்கா, பிரிட்டனிடமிருந்து ஏராளமான பணத்தைக்கொடுத்து துணியை வாங்கி நம்மை நாமே நாசப்படுத்திக் கொள்ளுகிறோம் என்பதில் சந்தேகமில்லை இவ்விதம் நம்முடைய பணம் பெருவாரியாக அந்நிய தேசங்களில் போய் சேர்ந்துவிட்டால் நம்முடைய தொழில்களுக்கு பண வசதி எங்கிருந்து கிடைக்கும் ? இப்பொழுது நமக்கு அதிகமான துணி இந்தியாவிலிருந்து கிடைத்துவருகிறது இந்தியாவில் கண்ட்ரோல் எடுபட்டவுடன் இங்கு 250-சதவிகிதம் விலை ஏறிவிட்டது.

மில் அமைத்தல்

புதிய மில்கள் அமைத்து தேவையை பூர்த்தி செய்து கொள்ளலாம். பத்து அல்லது பன்னிரண்டு மில்கள் புதிதாக ஏற்படுத்தினால்தான் நம் தேவை ஓரளவு பூர்த்தியாகும் பிரிட்டிஷார் இதற்கான வசதிகளை செய்து கொடுக்கலாம். ஆனால் அவர்களது நிலைமை மாறுபட்டிருக்கிறது. அமெரிக்காவிலோ மிஷினரிவிலைகள் அதிகமாக இருக்கிறது. நம்மிடமோ பணமும் கிடையாது. மிஷின்களுக்குத் தேவையான நிலக்கரி மின்சார வசதியும் கிடையாது. அதனால் மிஷின்கள் கிடைத்தாலும் அவைகளுக்குதேவையான உபபொருள்கள் இல்லாமல் எப்படி நடத்துவது. இதற்குமுன் இந்த மாகாணங்களில் துணி தேவை எப்படி பூர்த்தி செய்யப்பட்டு வந்திருக்கிறது என்பதைப்பற்றி நான் சொல்லத்தேவையில்லை. அது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

கதர் உற்பத்தி

தற்சமயம் இருக்கும் நிலைமையில் கதர் உற்பத்திதான் நம் தேவையை பூர்த்திசெய்து கொள்ளுவதற்கு ஒரேவழி. அரசாங்கத்திற்கு உண்மையில் ஜனங்களுடைய கஷ்டத்தை நீக்க எண்ணம் இருக்குமானால் கதர் உற்பத்தியை பெருக்க ஆக்கம் அளிக்கவேண்டும் ஆதியிலிருந்தே இங்கு நெசவாளர்கள் இருந்து வந்திருக்கின்றார்கள் பிரிவினைக்குப்பிறகு கிழக்கு பாஞ்சாலம், ஐக்கியமாகாணம், மத்திய மாகாணத்திலிருந்து ஒருலட்சத்துக்கு அதிகமாகவே நெசவாளிகள் வந்து குவிந்திருக்கின்றார்கள். அவர்களுக்கு சர்க்கா இன்னும் மற்ற நெசவுக்கான உபகரணங்கள் கொடுத்து உதவி அவர்களை சரியானபடி பிரயோஜனப் படுத்திக் கொண்டால் நம் நாட்டு துணிதேவை பூர்த்தியாவதுடன் குறைந்தபட்சம் ஐந்து லட்சம் ஏழை முஸ்லிம்களின் பொருளாதாரமும் உயரும் என்பதில் சந்தேகமில்லை பாகிஸ்தான் முழுவதிலும் சர்க்கா சுற்ற வேண்டும். நூல் உற்பத்தி பெருக வேண்டும். ஆங்காங்கு தறிகள் அதிகரிக்க வேண்டும். இதன் மூலம் ஆண், பெண் அகதிகள் பிரச்னையையும் ஓரளவுதீர்த்து வைக்கலாம். ஏழை பாகிஸ்தான் செல்வங்கள் வெளி தேசங்களில் போய் குவியாமல் இருக்கச்செய்யும் ஒரேவழி கதர் துணியை பெருக்குவதுதான்.

மேற்குப்பஞ்சால அரசாங்கத்தின் அக்கிரமம்!

சியால்கோட் கண்ட்ரோல் அதிகாரிகளுடைய சண்டித்தனம்!

(ஆஸாத்—லாகூர்)

சியால்கோட், செப். 22—

மஹல்லாகக்கே ஸய்யானில் நேற்று மாலை காய்தே ஆஜமுடைய பாத்தியா (மரணச்சடங்கு) நடத்தப்பட்டது. சியால்கோட் வாசிகள் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஏழைகளுக்கு அன்னமிடுவதென்று தீர்மானித்தார்கள். கண்ட்ரோல் அதிகாரிக்கு 4 மணங்கு அரிசிக்காக விண்ணப்பம் செய்துகொண்டார்கள். ஆனல் அதிகாரிகள் 11 சேர் அரிசிக்குத் தான் பர்மிட் கொடுத்தார்கள். எவ்வளவோ முயற்சி எடுத்தும் பாகிஸ்தான் அதிகாரிகள் இதற்குமேல் கொடுக்க அனுமதிக்கவில்லை. காய்தே ஆஜமைப் போன்ற பெரியாரின் மரணச் சடங்குக்கு ஒரு மணங்கு அரிசிகூட கொடுக்க மனது இல்லையே என்று வருந்துகிறோம். மணங்குக்கு ரூ. 60 விதம் கொடுத்துக்கூட அரிசி கிடைக்கவில்லை என்பதை சியால்கோட்வாசியாகிய நாங்கள் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

முகம்மது இக்பால்,
செக்ரெடரி,
மஹல்லா கக்கே ஸய்யான், ஸியால்கோட்.

● ● ●

காங்கிரஸ் முஸ்லிம் வெற்றி!

மீரத், செப். 22—

ஐக்கிய மாகாண சட்டசபையில் காலியான ஸ்தானத்திற்கு தேர்தல் நடைபெற்றது. நவாப் அஸ்லம் (முஸ்லிம் லீக்) சார்பாகவும், மௌலானா பஷீர் அகமது (ஜமியத் உலமா காரியக் கமிட்டி மெம்பர்) காங்கிரஸ் சார்பாகவும் போட்டியிட்டனர்.

நிலைமையைப் புரிந்துகொண்ட லீக் அபேக்ஷகர் நவாப் அஸ்லம் தனது அபேட்சை பத்திரத்தை வாபீஸ் வாங்கிக்கொண்டார். ஆகையால் காங்கிரஸ் சார்பாக நின்ற மௌலானா பஷீர் அஹமது எதிர்ப்பின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

உங்களுக்குத் தெரியுமா?

விலையுயர்ந்த நீலக்கல்.

லண்டன், செப் 30—

ஆஸ்திரேலியாவிலுள்ள குவின்ஸ்லாந்தில் ஒரு சுரங்கத் தொழிலாளியின் பணிவிச்கு மிகவும் விலையுயர்ந்த ஒரு நீலக்கல் அகப்பட்டிருக்கிறது. இதன் மதிப்பு 100,000 பவுனுக்கு மேல் இருக்கும் என்று கூறப்படுகிறது. அதன் எடை 1958-கேரட் என்று கூறப்படுகிறது.

o o o

ஜப்பானிய பாசியிலிருந்து பென்ஸிலின்

லண்டன் செப் 30—

ஜப்பானிலிருந்து கிடைக்கும் ஒருவித சிவப்புக் கடல் பாசியிலிருந்து பென்ஸிலின் தயாரிக்க முடியுமாம். அந்த பாசி ஏராளமாக பிரிட்டனுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. கார்ன்வாலிலும் இம்மாதிரி பாசி கிடைக்கிறதென்றாலும் ஜப்பானியப் பாசியின் தரம் உயர்ந்ததாக இருக்கிறதாம்.

o o o

ராக்ஷஸிகளுக்கு பள்ளிக்கூடம்

லண்டன் செப் 30—

புருஷனை ஆட்டி வைக்கும் ராக்ஷஸிகளுக்கு ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தி அவர்கள் குணத்தை மாற்ற ஒரு முயற்சி செய்யப்பட்டு வருகிறது. யுத்த பிற்கால கஷ்டங்களினால் இவர்கள் குணம் மாறியிருப்பதாகவும் அதைத் தணிக்கவே இப்பள்ளியில் பிரசங்கங்கள், பயிற்சிகள் முதலியவை அளிக்கப்படும் என்றும் தெரிகிறது. இவர்கள் குழந்தைகளும் பள்ளிக்கு அழைத்துவரப்படலாம். —குளோப்

தென்னூட்டு லீக்குண்டர்களின் விஷமத்தனம்

தேசீய முஸ்லிம்மீது துவேஷப் பிரச்சாரம்.

ஹைதராபாத் வெற்றியின் சந்தோஷத்தை பிரதிபலித்த காரணத்திற்காக, நான் வியாபாரத்தின் நிமித்தம் வெளியூருக்கு போயிருந்த சமயம், இவ்வூரைச் சேர்ந்த சில காலிகள், நான் அபின் வைத்திருந்ததற்காக கைது செய்யப்பட்டதாக துவேஷப் பிரச்சாரம் செய்திருக்கின்றார்கள்.

இது கலப்படமற்ற பொய் என்றும் மேலும் இவ்விதம் பொய் துவேஷப் பிரச்சாரம் புரிபவர்கள் நாட்டின் ஐந்தாம் படையினர் என்பதை தாங்களே தெள்ளத் தெளிவாக நிரூபித்துக்கொண்டவராவரென்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன்

இங்ஙனம்,
A. முகம்மது கவுஸ்,
தென்னூர், திருச்சி.

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் எமது "ஆஸாத்" விற்பனை செய்ய

ஏஜெண்டுகள் தேவை.

— மூன்றாவது உலக மஹா யுத்தம். —

கிழக்கு மேற்கு நாடுகளிடையே பிளவு அதிகரித்துவிட்டது மேலும் பலப் பரீட்சையால் கயிறு அறுந்துபோகுமென்பது நிச்சயம். இரண்டு வருஷங்களுக்குள் எவ்விதத்திலும் யுத்தம் நடக்காதென்று ஸர் அலெக்ஸாண்டர் நம்பிக்கை தெரிவித்தார். சமீப எதிர்காலத்தில் யுத்தம் சாத்தியமில்லை யென்று ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸும் அபிப்பிராயப்பட்டார். இருப்பினும், பிரிட்டிஷ் பாதுகாப்பு மந்திரி ஸர் அலெக்ஸாண்டர் பார்லிமெண்டில் சமாதானத்தைக் காக்க பிரிட்டன் தளவாட உற்பத்தியை பெருக்குவதாக அறிவித்ததிலிருந்து உலகம் யுத்தத்தை நோக்கி வேகமாக முன்னேறுவது வெளிப்படுகிறது

இரண்டாவது மஹாயுத்தத்தால் பிரிட்டனின் பொருளாதாரக் கட்டுக்கோப்பு தகர்ந்துபோயிற்று. ஏற்றுமதி, இறக்குமதி விகிதாசாரம் சீர் கெட்டு ஏற்றுமதியை அதிகரிக்கும் பிரச்னை பிரிட்டனின் ஜீவாதாரப் பிரச்னையாகிவிட்டது. நெருக்கடியை சமாளிப்பதற்கு ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸின் சிறந்த ஆலோசனையின் பேரில் உற்பத்தியைப் பெருக்கி ஏற்றுமதியை அதிகரிக்கும் வேலையில் தொழிற்கட்சி சர்க்கார் இறங்கிற்று

நாட்டின் தேவைகள் பெருமளவுக்கு குறைக்கப்பட்டன. அவசியமில்லாத பண்டங்கள் மட்டுமின்றி அவசியமான பல பண்டங்களின் இறக்குமதி கூட தடுக்கப்பட்டது. உற்பத்திப் பெருக்கில் பிரிட்டிஷ் மக்கள் தீவிரமாய் ஈடுபட்டனர். பெருமளவுக்கு வெற்றி பெற்றிருப்பினும் பிரிட்டன் தன்னுடைய லட்சியத்துக்கு இன்னும் வெகு தூரமாகவே இருக்கிறது.

இத்துறையில் பிரிட்டனுக்கு தடையாக இருப்பது ஜனசக்தி பஞ்சம்தான். உற்பத்தியைப் பெருக்க திடகாத்திரமுள்ள மக்களின் சக்தி அவசியம். அதற்காகவென்று உற்பத்தியுடன் சம்மந்தமில்லாத ராணுவம் முதலிய இலாகாக்களிலுள்ளவர்களை உற்பத்திப் பெருக்கத்தில் ஈடுபடுத்துவதை யாரும் வரவேற்க முடியாது. இருந்தும் பிரிட்டன் ஏராளமான ராணுவத்தினரை விடுவித்து உற்பத்திப்பெருக்கத்தில் ஈடுபடுத்த வேண்டியிருந்தது. இத்தனை கஷ்டங்களும் நெருக்கடியும் இருந்தும் தரை, கடல், விமானப் படைகள் எண்ணிக்கையில் பல லட்சம் அதிகரிப்பதென்று அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. இப்பொழுதுள்ள 31,000 கடற்படையினரை ஒன்றேகால் லட்சத்துக்கு உயர்த்தவும் ஒரு லட்சம் பிரதேச ராணுவம் திரட்டவும் இதே மாதிரியாக இதர சர்வீஸ்களை விஸ்தரிக்கவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. நவீன விமானங்கள் இதர தளவாடங்களின் உற்பத்தி இரண்டு மடங்காக பெருகும். ஏற்றுமதிக்கு அவசியமான யந்திர சாதனங்களை உற்பத்தி செய்யும் தொழிலாளர்கள், யுத்த சாதனங்கள் தயாரிப்பார்கள் என்பதே அதற்கு அர்த்தம்.

அங்கிலேயில் ஏற்றுமதி குறைந்து டாலர் பஞ்சம் ஏற்பட்டு அத்தியாவசியப் பண்டங்களின் இறக்குமதி குறைவு தவிர்க்கமுடியாத விளைவுகளாக இருக்கும். அதனால் சர்க்காருக்கு எதிராக அதிருப்தி வளர்ந்து தொழிற் கட்சி சர்க்கார் செல்வாக்கு இழக்கவும் கூடும். உற்பத்தி பெருக்கத்தையும் தங்கள் செல்வாக்கையும் கூட அபாயத்துக்குள்ளாக்கி யுத்த முஸ்தீபுகளில் தொழிற்கட்சி சர்க்கார் இறங்கியிருப்பது சூழ்நிலை எந்த அளவுக்கு சீரழிந்துவிட்டதென் பதையே காட்டுகிறது. சில தினங்களுக்கு முன் பிரிட்டனில் விமான ஒத்திகை நடந்தது அதில் எல்லாவித விமான தாக்குதல்களையும் சமாளிப்பதற்கு செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடுகள் பரீக்ஷிக்கப்பட்டன. இப்பொழுது பிரிட்டிஷ் கடற்கரைக்கு சமீபம் யுத்த பிற்காலத்திலேயே மிகப்பெரிய கடற்படை ஒத்திகையும் நடந்தது. இதில் 35,000 டன் எடையுள்ள யுத்தக் கப்பல்கள், குரூயிஸர்கள், விமானந்தாங்கி கப்பல்கள், நீர் மூழ்கி கப்பல்கள், கடல் விமானங்கள், கலந்துகொண்டன.

யுத்த முஸ்தீபுகள் செய்வதில் மற்றநாடுகளை பிரிட்டன் எப்பொழுதுமே முந்திக் கொண்டதில்லை என்பதற்கு அதன் சரித்திரமே சான்று. கடைசி நேரம் வரையிலும் உற்பத்தியை பெருக்குவதிலேயே அது முனைந்திருக்கும் இனியுத்தம் தவிர்க்கமுடியாது என்ற நிச்சயம் ஏற்பட்டாலொழிய பிரிட்டன் யுத்த முஸ்தீப்புக்களை எப்பொழுதுமே ஆரம்பிப்பதில்லை. இன்று பிரிட்டன் வேகமாக முஸ்தீபுக்கள் செய்வதைப் பார்த்தால் யுத்தம் வேகமாக சமீபித்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது பிரிட்டனின் இன்றைய ராணுவ பலம் கிட்டத்தட்ட பத்து லட்சம். கடந்த யுத்தத்துக்கு முன் அதாவது 1938-ல் அதனிடம் இரண்டு லட்சத்திற்கு மேல் ராணுவம் இருக்கவில்லை எந்த ஒரு பிரச்னையிலும் விட்டுக் கொடுக்கவோ சலுகை காட்டவோ முடியாதென்றும் நேச நாடுகள் எந்த நிலைமையையும் உறுதியுடன் எதிர்த்துநிற்க தயாராய் இருக்கின்றனவென்றும் ரஷ்யாவுக்குஉணர்த்தும் அரசியல் நோக்கங்களைக் கொண்டே முஸ்தீபுக்கள் செய்யப்படுவதாக ஸர் அலெக்ஸாண்டர் கூறினர்.

அது ஓரளவுக்கு நியாயமாகவும் இருக்கலாம். ஆயினும் நாடுகள் தளவாடங்களை உற்பத்தி செய்து விட்ட பிறகு யுத்தத்தை தடுப்பதற்கு அவர்களாலும் சாத்தியமில்லையென்ற அடிப்படை உண்மையை அலட்சியம் செய்துவிட முடியாது

இன்று நேசநாடுகளின் பிளவுக்கு பர்லின் பிரச்னையே காரணம். ஒரு மாதமாய் மாஸ்கோவில் நடந்த பேச்சு வார்த்தைகள் அவநம்பிக்கை யளிக்கத் தக்க விதத்தில் முறிந்துவிட்டன. பிளவு குறைவதற்கு பதிலாக அதிகரித்துவிட்டது. அதுமட்டுமின்றி கொரியா, கிரீஸ்போன்ற பல இடங்களில் எந்த நிமிஷமும் நெருக்கடி தோன்றுவதற்கு ஏற்ற சூழ்நிலை இருந்துவருகிறது. பந்தோபஸ்து சபையில் எல்லா நாடுகளும் சமாதானத்தில் விருப்பம் தெரிவித்திருப்பினும் பரஸ்பரக் குற்றச்சாட்டு நின்றபாடில்லை அத்துடன் உருட்டல் மிரட்டல்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன. ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தின் நிலைமையை பார்த்தால் ஸ்தாபனமே குலைந்துபோய் விடுமோ வென்று கூட சந்தேகிக்க வேண்டியிருக்கின்றது ரத்ததிகாரம் பிரச்னை சச்சரவுகளை கிளப்பியிருக்கிறது. ரத்துரிமைக்கு ஐக்கியநாட்டு ஸ்தாபனம் இணங்க முயற்சி செய்தால் அதன் விளைவுகள் பயங்கரமானதாகவே இருக்குமென்று ரஷ்யா எச்சரித்திருக்கின்றது ரஷ்யாவும் அதன் நேசநாடுகளும் ஸ்தாபனத்திலிருந்தே வெளியேற வேண்டியிருக்கும் என்பதே அதற்கு அர்த்தம். அதன்பிறகு 1935-ல் காலஞ்சென்ற 'லீக் ஆப் நேஷன்ஸுக்கு' ஏற்பட்ட கதியே ஐக்கியநாட்டு ஸ்தாபனத்திற்கும் ஏற்படும் என்பது தெளிவு.

இதை யெல்லாம் பார்க்கும்போது இரண்டு கோஷ்டிகளும் பயங்கர மோதலுக்கு துரிதமாய் தயாராகின்றன என்ற முடிவுக்கே வரமுடியும். ரஷ்யாவின் யுத்த முஸ்தீபுகள் பற்றிய விவரங்கள் யாருக்கும் தெரியாது. ஆயினும் நேச நாடுகளைவிட பலமாகவே இருக்குமென்று நம்பப்படுகிறது. ஐரோப்பாவில் ரஷ்யா புகவொட்டாமல் தடுப்பதற்காக பிரிட்டனின் தலைமையில் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் யூனியன் அமைக்கப்படுவதுடன் மத்திய கிழக்கில் துருக்கி கிரீஸ் தலைமையில் ரஷ்யாவுக்கு எதிரான அணி ஒன்றும் அமைக்கப்படுகின்றது. இப்பொழுது பிரிட்டிஷ் காமன்வெல்த் பாதுகாப்புக்காக லண்டனில் ஒரு முக்கிய மகாநாடு நடக்கவிருக்கிறது அந்த மகாநாட்டில் இந்தியாவின் தலைமையில் தூரக்கிழக்கில் ரஷ்யாவுக்கு எதிரான அணி ஏற்படுத்தவும், ஈரான், ஆப்கானிஸ்தானுக்கு பாகிஸ்தான் தலைமைவகிக்கவும் முயற்சிக்கப்படலாம் அம்மாதிரியான எவ்வித திட்டத்தையும் இந்தியாவின் பிரதம மந்திரி ஏற்கமாட்டாரென்றும் யுத்தம் ஏற்பட்டால் நடுநிலைமையை கண்டிப்பாக கடைபிடிப்பாரென்றும் நம்பலாம்.

இந்தியா சமாளிக்க வேண்டிய பிரச்னைகள் பல இருக்கின்றன. கடந்த மஹாயுத்தத்தில் வெற்றியடைந்தும் பிரிட்டன் பிரான்ஸ் போன்ற பலம் வாய்ந்த நாடுகள் மூன்றாம் நம்பர் சக்திகளாகிவிட்டன. அதனால் தகர்ந்துவிட்ட பொருளாதார சீர்கேட்டை சரிப்படுத்த தங்கள் ஆட்சியையே அபாயத்துக்குள்ளாக்கிக்கொண்டு முயற்சித்தும் வருகின்றன. கடந்த மஹா யுத்தத்தின் பயங்கர விளைவுகள் கண்ணுக்கு முன் காட்சி யளித்துக்கொண்டிருக்கையில் இந்தியா யுத்த அபாயத்தை விலக்கு வாங்க முடியாது.

[3-ம் பக்கத் தொடர்ச்சி.]

ஹைதராபாத்

பொருளாதார முற்றுகையையும் ஹைதராபாதை தாக்கும் எண்ணத் தயும் கைவிடும்படி அறிக்கைகள் மூலம் இந்திய யூனியனுக்கு பன்முறை எச்சரித்திருக்கிறேன். அதனால் ஹிந்துக்களுக்கு அதிக சிரமங்களே ஏற்படும். லட்சக் கணக்கில் பட்டாணியர்கள் ஹைதராபாதுக்கு உதவி செய்யத் தயாராய் காத்துக் கொண்டிருக்கி றனர். ஹைதராபாத் தாக்கப்பட்டவுடன் பாகிஸ்தானின் எவ்வித தடையையும் லட்சியம் செய்யாமல் தங்கள் சகோதரர்களுக்கு உதவி செய்ய அவர்கள் ஹைதராபாத் போய்ச் சேர முயற்சிப்பார்கள்.

சமீபத்தில் மால்கண்ட் ஏஜென்ஸியின் சுதந்திர மலைஜாதியினர் மஹாநாட்டுக்குத் தலைமை வகித்தேன். 15,000 மலைஜாதிப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். அதில் காஷ்மீர் பூராவையும் ஆக்ரமிப்பதென்றும், ஹைதராபாத்துக்கு உதவி செய்யத் தயாராயிருப்பதென்றும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

ஈத் பிரார்த்தனையில் ராஜாஜி.

டெல்லி செப். 26.—

கவர்னர் ஜெனரல் ஹிஸ் எக்ஸலன்ஸி ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் ஈத்பெருநாள் தினத்தில் தொழுகை நடத்தும் இடத்தில் சென்று பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்துகொள்வாரென்று தெரிகிறது. மிஸ்டர் ஜின்னு கலந்து கொண்டு வேற்றுமையை வளர்த்த அதே இடத்தில் ராஜாஜி ஒற்றுமையை வளர்க்க முயற்சிப்பார் என்று நம்பப்படுகிறது.

'ஆஸாத்' சங்கம், தென்காசி.

இச்சங்கத்தின் நிர்வாகக்கூட்டம் 26—9—48-ல் ஜனுப் அ. மு. அப்துல் பாசீத் சாகிப் தலைமையில் நடந்தது. அவ்வமயம் இந்தியாவின் கவர்னர் ஜெனரல் சக்கரவர்த்தி ஸி. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் வேண்டுதலுக்கிணங்கி ஹைதராபாத்தில் போலீஸ் நடவடிக்கை வெற்றி பெற்றதற்கும் மக்களிடையே சாந்தத்தை நிலவச்செய்ததற்கும் ஆண்டவனுக்கு நன்றி செலுத்தப்பட்டது. கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. ஹைதராபாத்தின் மீது இந்திய சர்க்கார் எடுத்த போலீஸ் நடவடிக்கையை பாராட்டுவதுடன், இதில் பங்கெடுத்துக்கொண்ட தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ராஜேந்திரசிங்ஜிக்கும் மற்றைய வீரர்களுக்கும் மகிழ்ச்சியை தெரிவிக்கிறது.

2. நடவடிக்கையின்போது கட்டுப்பாட்டுடனும் அமைதியுடனும் இருந்த இந்திய யூனியனிலுள்ள ஹிந்து முஸ்லிம்களைப் போற்றுகிறது.

3. சக்கரவர்த்தி C. ராஜகோபாலாச்சாரியாரை இந்திய கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டதைக் குறித்து மகிழ்ச்சியடைவதுடன் அன்னருக்கு நீண்ட ஆயுளையும், கீர்த்தியையும் அளிக்கும்படி இறைவனை வேண்டுகிறது.

4 மாகாணம் பூராவும் மதுவிலக்கு 2--10--48 முதல் அமுலுக்கு வருவதை வரவேற்கிறது.

5. உஸ்மான், ஹவில்தார் ஷேக்முஹம்மது இப்ராஹிம், மாஜி மதுவிலக்கு மந்திரி டேனியல் தாமஸ், ஸ்ரீ P. ரத்தினவேல் தேவர், மிஸ்டர் ஜின்னு இவர்களின் மரணத்திற்கு இக்கூட்டம் அனுதாபம் தெரிவிக்கிறது.

P. M. அப்துல்சலாம்,
காரியதரிசி.

O O O

முறையூர்

செப். 26.

இன்று நேதாஜி மைதானத்தில் காங்கிரஸ்கமிட்டி சார்பாக சொக்கலிங்கம் பிள்ளை தலைமையில் ஹைதராபாத்தினம் கொண்டாடப்பட்டது. காரியதரிசி வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது.

செகரடரி,
காங்கிரஸ் கமிட்டி.

O O O

தஞ்சை ஜில்லா அரசியல் மகாநாடு

24—9—48ல் பட்டுக்கோட்டையில் கூடிய தஞ்சை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் தீர்மானித்தப்படி அதிராம்பட்டணத்தில் அக்டோபர் மாதம் நடைபெறப்போகும் தஞ்சை ஜில்லா அரசியல் மஹாநாட்டுக்கு வரவேற்பு கமிட்டி அமைப்பதற்காக 8—10—48 காலை 10 மணிக்கு அதிராம்பட்டணம் ரெஸ்டு ஹவுஸில் ஒரு கூட்டம் நடைபெறும். அக்கூட்டத்திற்கு பட்டுக்கோட்டை தாலூக்காவிலுள்ள பிரதம கமிட்டிகளின் தலைவர், காரியதரிசிகள் மாகாண காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்கள், ஜில்லா காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்கள், சட்டசபை அங்கத்தினர்கள் மற்றும் காங்கிரஸ் ஊழியர்கள் அனைவரும் விஜயம் செய்யும்படி கோருகிறேன்.

ரா. வரதராஜலு, காரியதரிசி,
நகர காங்கிரஸ் கமிட்டி, அதிராம்பட்டணம்

O O O

சித்திலிங்கமடம்.

திருக்கோவிலூர் தாலுக்கா காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் 18—9—48ல் ஜில்லா போர்ட் சத்திரத்தில் தலைவர் S. A. M. அண்ணாமலை தலைமையில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

1. ஜில்லா காங்கிரஸ் அறிக்கைப்படி இந்த தாலூக்காவிற்கு மதுவிலக்கு கமிட்டி ஒன்று ஏற்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

1. B. பிர்க்காவாரியாக இரண்டு மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு மொத்தம் 15 மெம்பர்கள் கொண்ட கமிட்டி அமைக்கப்பட்டு ஷை கமிட்டிக்கு ஸ்ரீ, S. A. M. அண்ணாமலையை தலைவராகவும் கோ. தம்புசாமியை காரியதரிசியாகவும் இருந்து 25—9—48-க்குள் பிர்க்கா நகர கிராம வாரியாக மதுவிலக்கு கமிட்டி அமைக்க அதிகாரமளிக்கப்பட்டது.

2. மகாத்மா காந்திஜீயின் பிறந்ததின விழாவை 25—9—48 முதல் 9—10—48 வரை கொண்டாட பிர்க்கா கிராம காங்கிரஸ் கமிட்டிகளையும், பொது ஸ்தாபனங்களையும் பொதுமக்களையும் கேட்டுக்கொள்வதுடன் ஷை தினங்களில் காந்திஜீ தேசீய நிதி வசூலை ஊக்கத்துடன் முனைந்து வசூலிக்கும்படி இக்கமிட்டி கேட்டுக்கொள்கிறது

3. ஹைதராபாத் மீது இந்திய சர்க்கார் எடுத்த போலீஸ் நடவடிக்கையை பாராட்டுகிறது.

4. இந்த தாலூக்காவிலுள்ள யெல்லா பிர்க்கா காங்கிரஸ் கமிட்டிகளுடைய புதிய தேர்தலை நடத்தி வைக்க தலைவர், காரியதரிசிக்கு அதிகாரம் அளிக்க தீர்மானிக்கப்பட்டது.

R. நடராஜன்
காரியதரிசி, தாலூக்கா காங்கிரஸ் கமிட்டி,
சித்திலிங்கமடம்.

"பழைய குருடிதானா?"

—: ஜௌஹர் :—

ஜவுளிநூல் "கண்ட்ரோல்" கட்டுப்பாடு முறையை மீண்டும் அமுலுக்குக் கொண்டுவரப்போவதாக கைத்தொழில் அமைச்சர் சீத்தாராம ரெட்டியார் அவர்களின் அறிக்கையும், மத்திய சர்க்கார் கைத்தொழில் மந்திரி முகர்ஜி அவர்களின் அறிக்கையும் தெளிவு படுத்துகிறது.

கால நிலைமை உத்தேசித்தும் உற்பத்திக் குறைவான நம் நாட்டின் சூழ்நிலையை சமாளித்து உற்பத்தியை பெருக்கவும் ஏழைத் தொழிலாளர்களும், சர்க்காரும் இன்னலுமுறாமலிருக்கவும்,பலபத்திரிகைகளும், பல எழுத்தாளர்களும் எழுதியும், பேசியும் கடைசியில் "செவிடன் காதில் ஊதிய சங்கை" ப்போலவே இருந்தது.

இத்தனை காலத்திற்கு பின்பேனும் "கண்ட்ரோல் முறையை" மீண்டும் அமுலுக்குக்கொண்டுவர வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்து செயலில் கொண்டுவரப்போகும் நமது சர்க்காரின் செயலையாகும். பாராட்டாமல் இருக்க முடியாது, சபாஷ் கண்ட்ரோல்! —ஆனால் .... ???

நூல் கண்ட்ரோலும் விநியோகமும் } எப்படி ?

நமது சென்னைமாகாணத்திற்குறியமொத்த நூல் முழுவதையும், விநியோகிக்கும் பொறுப்பை கோவாபரேடிவ் சங்கங்களின் மூலமாக நடத்த முடிவு செய்திருக்கிறார்கள். அது நல்ல முறைதான்; ஆனால் கோவாபரேடிவ் சங்கங்களின் மூலம் புதிய கண்ட்ரோல் திட்டம் எந்தமுறையில் அமுல் நடத்தப்போகிறார்கள்? என்ற விபரம் தெரியவில்லை. கூடிய விரைவில் சர்க்காரிலிருந்து "ஜவுளிநூல் கண்ட்ரோல் பிரகடனம் வெளிவரும் என்று நம் மாகாண கைத்தொழில் மந்திரி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். பிரகடனம் எப்படி? என்ன ரூபத்தில்? எப்பொழுது திருவாய் மலருமோ? தெரியவில்லை. ஏழை நெசவுத் தொழிலாளியின் உயிர்—அல்ல—வயிற்று நாடியைப் பொருத்த இப்பிரச்னையில், சர்க்காரின் அலுவல்கள் 'எருமை மாட்டின்மேல் மழை பெய்தமாதிரி' ஆமை வேகத்தில் நடக்குமானால் தொழிலாளர்கள் தங்கள் பசியை தடுக்க" குடல்களை உருவிக் கூரையில் உலர வைத்துக்கொள்ளவேண்டியதுதான்! நூல் கட்டுப்பாடு எப்படிச் செய்தபோதிலும் அதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. விநியோக முறை எப்படி? எப்படி நூல்களை பெறுவது? என்ன அளவு? எப்படிஎன்பதே இப்பொழுது ஒவ்வொரு நெசவுத் தொழிலாளியும் கவலையுடன் எதிர்பார்க்கும் பிரச்னை.

எந்த முறை?

இன்றைய நிலைமையில் நெசவுத்தொழிலாளிகள் நூல் பெறும் விஷயத்தில் இரண்டே வழிகள் தான் உண்டு. ஒன்றாவது பழைய முறைப்படி - அதாவது கூப்பன் ஏற்பாட்டின்படி நூல்பெறுவது, அல்லது புதிய புள்ளிவிபரக் கணக்குகள் எடுத்து அதன்படி கூபன்கள் வழங்கி நூல் விநியோகிப்பது.

முதல் முறை:—அதாவது பழைய ஏற்பாட்டைக் கையாண்டால் அதில் பலவிதஊழல்கள் உண்டு. சாப்பிடும் வயிறுகள் இரண்டைத் தவிர வேறொன்றுமே ஆண்டவனருளால் பெற்றிராத பாக்கியத் தம்பதிகள் டஜன் கணக்கான கூப்பன்களைப்பெற்றுக்கள்ளமார்க்கெட்டில் கொள்ளையடித்துப் பணமேடு குவித்தவர்களும் உண்டு.

டஜன் கணக்கான வயிற்றுப் பிண்டங்களை வளர்த்துக் காப்பாற்றவேண்டிய தரித்திரக் குடும்பங்களுக்கு 'ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு" என்ற ரீதியில் ஒரே ஒரு கூப்பனைப் பெற்று குடும்ப வாழ்க்கையை நடத்த முடியாமல் கடனாளிகளாகி ஓட்டாண்டிகளானதுமுண்டு.

தவிர நெசவுத் தொழிலாள வர்க்கத்தைச்சேர்ந்த (ஆனால் நெசவுத்தொழில் செய்யாத - செய்ய முடியாத) ஸாம்பனார் ஷாப் வியாபாரிக்கும், சப்கோர்ட் ஹெட்கிளார்க்குங்கூட "நல்லார்க்குப்பெய்யும் மழை எல்லார்க்கும்" என்ற மாதிரி கூப்பன்கள் உண்டு. ஏக காலத்தில் தொழிலாளி வேஷமும், உத்தியோக வேஷமும் வியாபார வேஷமும், நடித்து உத்தியோக-வியாபார - வருமானம் வேறு. உபரி நூல் கூப்பன் வருமானம் வேறு இப்படி பல்வேறு வருமானம் பெறும் பாக்கியவான்களும் உண்டு. இவைகள் முதல் முறையை கையாள்வதால்ஏற்படுபவை. இரண்டாவதாகக் கூறிய புதிய புள்ளி விபரக்கணக்குகள் எடுக்கும் கொள்கையை கையாண்டாலோ கேட்கவா வேண்டும்? ஆசை யாரைத்தான்விடும். கோடிக்கணக்கான கூப்பன்கள் கொடுக்கவேண்டியுமேற்படலாம்.

என்றாலும் தகுந்த விசாரணை மூலம் கூப்பன் அவசியமா? அதிகமா! என்பதைத் தெரியவும் ஆதாரத்தின் மூலம் குறைவானவருக்கு கூடுதல் கூப்பன்கள் அளிக்கவும், அவசியமின்றி இருக்கும் அதிகமான

ஒரு சரித்திரம்.

[சென்ற இதழ் தொடர்ச்சி]

ஜஹாங்கீர் காலத்தில் காண்டகார் பாரசீகர்களால் கைப்பற்றப்பட்டது. ஷாஜஹான் காலத்தில் அதைப்பெற மீண்டும் மீண்டும் முயற்சிகள் செய்யப்பட்டன. 1639-ல் அதை அலி மார்தான்கான் என்ற பாரசீக கவர்னர் ஆண்டுவந்தான். பாரசீக மன்னன் தன் மீது ஐயுறவுகொண்டிருப்பதால் தன்னைத் துன்புறுத்தக்கூடுமென்று பயந்து அவன் டில்லிச் சக்கரவர்த்திக்குச்சொல்லியனுப்பினான். டில்லிப்படைகள்காண்டஹாரை வெகு எளிதாகக் கைப்பற்றின. ஆனால் பாரசீகர்கள் விட்டுவிடவில்லை. 1649-ல் அதைத் திருப்பிப் பிடித்துக்கொண்டார்கள். அதன் பிறகு டில்லிச் சக்கரவர்த்தி அதைப் பிடிப்பதற்கு அநேகந் தடவை முயன்றும் 12 கோடி ரூபாய் செலவோடு முயற்சிகள் கைவிடப்பட்டன.

பால்க்கையும், பாதாக்ஷானையும் ஜெயிப்பதற்கு ஷாஜஹான் முயன்றார் மூராத இளவரசன் ஒரு பெரிய சைனியத்தோடு அனுப்பப்பட்டான். பொக்காரா அரசர் நாஸ் முகம்மதுகானுக்கும் அவருடைய மகனுக்கும் தகராறு நடந்துகொண்டிருந்தபடியால் மூராது யாதொரு எதிர்ப்புமின்றி 1646-ல் பால்க்கில் நுழைந்தான். நாஸ் முகம்மது ஓடிவிட்டான். மூராது ஹிந்துஸ்தானத்துக்கு திரும்பிவிட்டதால் ஒளரங்கசீப் பின்கீழ் ஒரு படை சென்றது ஒழுங்காகச் சண்டை நடைபெறவில்லை. ராஜ புத்திரர்களும் மொகலாயர்களும் சேர்ந்து சுட ஆரம்பிக்கவும் உஸ்பெக்குகள் போர்க்களத்தை விட்டு ஓடலானார்கள் ஒளரங்கசீப் பால்க்கினுள் வெற்றி வீரனாய் நுழைந்தான். அதற்கு மாது சிங் ஹாதா யென்ற ராஜபுத்திரனைத் தலைவனாக்கினான். ஒளரங்கசீப் மேலும் செல்ல யத்தனிக்கையில் மிகவும் சங்கடப்பட்டுத் தோல்வியைக் கண்டான். திரும்பும்பொழுது அவனுடைய சேனைகள் மிகவும் கஷ்டமடைந்தன. அங்கு நிறுத்தப்பட்டிருந்த ராஜ புத்திரர்கள் உண்ண உணவும் ஒதுங்க நிழலுமின்றி மாண்டார்கள். இம் முயற்சியும் சுமார் 4-கோடி ரூபாய்ச் செலவோடு முடிவடைந்தது.

1657 - செப்டம்பரில் ஷாஜஹான் நோய்வாய்ப்பட்டார். இது பலவித வதந்திகளைக் கிளப்பிவிட்டது. பொதுஜனங்களிடைப் பரபரப்புண்டாக்கியது. பட்டத்துக்கு யார் வருவதென்ற போட்டாப் போட்டிச் சண்டைகள் ஏற்பட்டன. தன்னுடைய சகோதரர்

கூப்பன்களை குறைக்கவும் புதிய புள்ளி விபரக்கணக்குகள் எடுப்பதில் பயன் படுத்தலாம் என்பது என் அபிப்பிராயம். இன்னுமொரு நன்மையும்உண்டு. வெளி நாடுகளில் தொழில் செய்து வந்த நெசவுத் தொழிலாளக் குடும்பங்கள் சென்ற யுத்தத்தின் காரணமாக சொந்த ஊர்வந்து நூல் கூப்பன் இன்றி இதுவரை தொழில் செய்யவழியின்றி ஜீவமரணப் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கும் நாதியற்றவர்களுக்கும் நன்மை ஏற்பட புதிய புள்ளி விபாக்கணக்கு எடுத்து உயிர்ப்பிச்சை அளிக்க வேண்டியது சர்க்காரின் பொறுப்பு.

ஆளுக்கொரு நீதி ?

முந்திய கண்ட்ரோல் காலத்தில் ஒரு கூப்பன் உடைய ஒரு தனித்தொழிலாளி மாதம் ஏறக்குறைய $1\frac{1}{4}$ கட்டு நூலும் 25 ரூ வருமானமும் ஒரு சங்கத் தொழிலாளி மாதம் 2 கட்டு நூலும் 50 ரூபாய் வருமானமும் பெற்றிருக்கிறார்கள். முறையே வருஷக் கணக்கைப்பார்த்தால் ஒரு சங்கத்தொழிலாளிக்கு வருமானமும், நூலும் சரியாக கிடைத்திருக்கும். கூப்பன் உடைய தனித்தொழிலாளிக்கு வருஷத்தில் 3 அல்லது 4-மாத நூல்கிடைத்திருக்காது. விடப்பட்டிருக்கும்.

	கிடைத்த மாத நூல்	கிடைத்த மாத வருமானம்.	வருஷத்தில் விடுதல்	வருஷ வருமானம்
சங்கத் தொழிலாளி ஒருவருக்கு	2கட்டு.	50 அல்லது 55 ரூ.	…………	24 கட்டு நூலும், 650ரூபாயும்
ஒரு கூப்பனுடைய ஒரு தனித் தொழிலாளிக்கு	1 அல்லது $1\frac{1}{4}$ கட்டு	25அல்லது 30 ரூபாய்	3 அல்லது 4 மாதம்	15 கட்டு நூலும் 300 ரூபாயும்.

ஆகவே இந்த நிலைமையில் தனித் தொழிலாளர்கள் என்ன செய்வார்கள்? இந்த அநீதி எதற்காகத் தனித் தொழிலாளிக்கு? இவர்களுக்கு வருமானம் எங்கிருந்தேனும் பொத்துக்கொண்டு வருமா என்ன? ஆளுக்கொரு நீதியா?

ஆகவே இப்படிப்பட்ட தார தம்மியத்தைத் தகர்த்து சமநீதி எல்லோருக்கும் வழங்கவேண்டும். உள்ளவன் இல்லாதவன் என்ற நிலை ஒழியவேண்டும். இன்னோன்ன விஷயங்களில் சர்க்காரும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் கவனம் செலுத்தாவிடில் கள்ள மார்க்கட் தடுப்பும் புதிய கண்ட்ரோல் திட்டமும் வெற்றிபெற முடியாது. பழைய குருடி கதவைத் திறடி என்ற மாதிரியே முடியும் என்பதைச் சொல்லவா வேண்டும்.

களான தாரா, ஷுஜா, மூராது என்பவர்களைக் கொன்று ஔரங்கசீப் எவ்வாறு பட்டத்திற்கு வந்தான் என்பது யாவரும் அறிந்ததே. பீஜப்பூர், கோல்கொண்டா ராஜ்யங்களை எதிர்த்து எவ்வாறு நெடுநாள் சண்டைசெய்தான் என்பதும் ஏற்கனவே சொல்லியாகிவிட்டது. 250-வருஷக்கடும் நடவடிக்கைகளுக்கப்புறம் இவைகள் சாம்ராஜ்யத்தோடு சேர்க்கப்பட்டன.

ஔரங்கசீப் தன்னிடம் ஹிந்துச் சேனாதிபதிகளை வைத்திருந்தானென்றால் அவனுடைய ஹிந்து எதிரியான 'சிவாஜியும் தன் கீழ் ஏராளமான முஸ்லிம் படைவீரர்களை வைத்திருந்தான். அவர்களில் தளபதி சித்தி ஹல்லால், நூர்ஜஹான்போன்ற சிலர் உயர்ந்த பதவிகளையும் வகித்துவந்தார்கள். சிவாஜியின் கடற்படையில் சித்தி சம்பால், சித்திமிஸ்ரி, தௌலத்கான் என்ற கப்பற்படைத் தலைவர்களிருந்தனர்.'

நான் இதுகாறும் சரித்திர ஆராய்ச்சியில் சுற்றியலைந்த நோக்கம் இந்தியமுஸ்லிம் அரசர்கள் தங்களுக்குள் சண்டையிடுவதைத் தவிர வேறொன்றும் செய்யவில்லை என்பதைக் காட்டுவதற்காகவல்ல. உண்மையில் அவர்கள் அரும் பெருங் காரியங்களைச் சாதித்திருக்கிறார்கள். அவர்கள் ஒரு சாம்ராஜ்யத்தை உருவாக்கினார்கள்; அச் சாம்ராஜ்யம் சிறப்பின் சிகரத்தையடைந்தது. அவர்கள் கலைகளுக்கு ஆக்கம் அளித்தார்கள். இந்தியதேசீய ராஜ்யமொன்று மெள்ள மெள்ளத் தோன்றுவதற்கு அவர்களே காரணம். அக்காலங்களில் எங்கும் இருந்த தேசிய ராஜ்யங்கள் போன்றே இதுவும் ஏற்பட்டது. முஸ்லிம்கள் ஹிந்துக்களோடு சண்டைபோட்டதைக்காட்டிலும் முஸ்லிம்களே முஸ்லிம்களோடு அதிகமாகச் சண்டை போட்டார்கள் என்பதைக் காட்டவே மேற்கூறிய உதாரணங்களை யெடுத்துக் காட்டினேன். சென்ற அறுநூறு வருஷகாலமாக முஸ்லிம்கள் இடைவிடாது ஹிந்துக்களோடு போராடி அவர்களைக் கொடுமைப் படுத்தினார்கள். என்றும் அதன் பயனாக ஒரேவெறுப்பும் கடுகடுப்பும் தான் மிஞ்சியிருக்கின்றன என்றும் அவைகளை மனத்தினின்று துடைப்பதோ மறப்பதோ இயலாதென்றும் சிலர் நினைப்பதெல்லாம் சரித்திர உண்மைகளைத் தவறாக உணருவதன் பலன்; ஒருதலைச் சார்பான பார்வையின் கோளாறு

சமீப காலங்களில் பிரிட்டிஷ் படைகளில்சேர்ந்த இந்திய வீரர்கள் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்காகக் கிழக்கே சைனா, மலாயா, பர்மாவுக்கும் மேற்கே அரேபியா, பாரசீகம், ஆப்கானிஸ்தானம், எகிப்து, துருக்கி, சிரேனெய்க்கா, திரிப்போலி இன்னும் ஐரோப்பா முதலிய இடங்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றனர். துருக்கி சாம்ராஜ்யத்தை அழிப்பதற்கு முஸ்லிம் வீரர்கள் சண்டைபோட்டு உதவியிருக்கிறார்கள். தாங்கள் சண்டை தொடுத்த ராஜ்யங்களும் நாடுகளும் இஸ்லாமைச் சேர்ந்தவையல்லவா என்ற விஷயம் இவர்களைச் சிறிதும் தடுத்ததாகத் தெரியவில்லை. இதில் வியப்பதற்கொன்றுமில்லை. இந்தியாவுக்கு வெளியிலுள்ள இஸ்லாமின் சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தோமானால் முஸ்லிம்கள் முஸ்லிம்களோடு சண்டையிட்டதையும் ஒரு முஸ்லிம் நாடோ அல்லது அரசனோ மற்றொரு முஸ்லிம் நாடு அல்லது அரசனைத் தோற்கடித்து வென்றதையும் ஏராளமாய்க் காணலாம்.

முஸ்லிம்கள் முஸ்லிம்களைக் கொல்லக் கூடாதென்று நபிகள் நாயகம் விதித்திருக்கிறார். அவர் உயிரோடிருக்கும்போதே இதுவிஷயமாக ஒருகேள்வி எழுப்பப்பட்டது. அதாவது ஒருவன் சண்டைபோட்டுக்கொண்டிருக்கும் போதே தான் முஸ்லிம் என்று சொல்லுகிறான். ஆனால் அவன் வார்த்தைகளை நம்புவதற்கில்லை. இந்த நிலைமையில் அவனை விட்டுவிடுவதா என்பதே அக்கேள்வி. அதற்கு நபிகள் நாயகம் 'எப்பொழுது ஒரு மனிதன் தன்னை ஒரு முஸ்லிம் என்று கூறுகிறானோ அப்போதவனைக் கொல்லக்கூடாது. காப்பாற்றவேண்டும்,' என்று கூறினார். அவர் இறந்த உடனே அவரோடு கூடப் பழகியவர்களாலும் அவரது நேர் சிஷ்யர்களாலும் கூட இந்தக் கட்டளை மறக்கப்பட்டதாகவும் மீறப்பட்டதாகவும் தெரிகிறது. ஹஸ்ரத் உஸ்மான் மூன்றாவது கலிபா. அது மட்டுமல்ல., நபி நாயகத்தின் இரு பெண்களை மணந்து கொண்டதால் அவருக்கு நெருங்கியவருமாவர். அவருக்கு எதிராகக் கலகஞ்செய்த முஸல்மான்களால் அவர் கொல்லப்பட்டார்.

நாலாவது கலிபா ஹஜரத் அலி, நபிநாயகத்திற்கு மற்றொரு மருமகன். இவர் நபி நாயகத்தின் விதவை ஹஜரத் ஆய்ஷாவோடு போரிட வேண்டியிருந்தது. இவரும் ஹஜரத் உஸ்மானைப் போல முஸல்மான்களால் கொல்லப்பட்டார். ஓமய்யாது ஏசிதுவைக் கலிபா வாக்க முயன்ற முஸல்மான்களால் ஹஜரத் அலியின் குமாரர்கள் கொல்லப்பட்டனர். தீர்க்கதரிசி இறந்த சில வருஷங்களுக்குள்ளேயே நிலைமை இப்படி இருந்ததென்றால், அதுவும் முதன் முதலில் முஸ்லிமானவர்களுக்குள்ளும் - ஹஜரத் அலிதான் தீர்க்கதரிசியிடம் நேராக இஸ்லாமை ஏற்றுக்கொண்ட முதல் வாலிபர் - அவருடன் கடைசி வரை யிருந்தவர்களுக்குள்ளும் நிலைமை இப்படி யிருக்குமானால், பிந்திய முஸ்லிம்கள் முஸ்லிம்களோடு சண்டை போடலாம் என்பது புரிவதற்கு எளிதான விஷயமே.

ஆதிகாலத்திய முஸ்லிம்களுக்குள் ஏற்பட்டசண்டைகளை விட்டுவிடுவோம். பிந்திய முஸ்லிம்களுக்குள்

ஏற்பட்ட சண்டைகளுக்குக் காரணம் இஸ்லாமைப் பரப்புவதோ அல்லது காப்பாற்றுவதோ அல்ல. இஸ்லாம் ஒரு மதம் என்றமுறையில் அச்சண்டைகளுக்கு அது ஒரு தூண்டுகோலாயிருக்கவில்லை. இந்தியாவின் மீது படையெடுத்து இந்தியாவினுள் அவர்கள் சண்டையிட்டுக்கொண்டதற்கும் இஸ்லாம் மதம் காரணமல்ல நாடுபிடித்த ஒவ்வொருவனும், அரசனான ஒவ்வொருவனும், சக்கரவர்த்தியான ஒவ்வொருவனும் தான் ஆளப்புகுந்த நாட்டின் நிலைமைகளுக்கும் அங்குள்ள பொது மக்களுக்கும் ஏற்ற முறையில் எப்படி நிர்வாகம் செய்தால் நல்லது என்று நினைத்தானே அந்த முறையில் தான் அரசு புரிந்தான். நிர்வாகத்தையும் பொதுமக்களுடைய வாழ்வையும் இஸ்லாம் சந்தேகமில்லாமல் பாதித்தது. அரசனுடைய வாழ்வையும் ஒருங்கே பாதித்தது இந்தியாவிலும் சரி, வெளியிலும்சரி, மண்ணாசை பிடித்த இந்த வேந்தர்களின் நோக்கம் இஸ்லாமைப் பரப்புவதென்பதோ அல்லது காப்பாற்றுவதென்பதோ அல்ல. குறிப்பாக இந்தியாவில் முஸ்லிம் அரசர்களும், பொதுவாகஎல்லா முஸ்லிம்களும் சிறு சிறு தீவுகளைப்போல அமைந்திருந்தார்கள். இத்தீவுகள் சிறிது சிறிதாகச் சுற்றிலும் வளர்ந்துவிட்டன இந்தியாவிற்குள் படையெடுக்கவும் நாடு பிடிக்கவும் வந்த அன்னியர்களின் எண்ணிக்கை, முஸ்லிம் அல்லாதாரோடு ஒப்பிட்டுப்பார்க்குமிடத்து, மிகக் குறைவே. தற்காலத்தில் முஸ்லிம் ஜனத்தொகையிலுள்ள பெரும்பான்மையோர் - உண்மையில் மிகவும் அதிகமானபேர் - இஸ்லாமைத் தழுவிய இந்தியர்கள்; இந்துக்களாயிருந்து மதம் மாறியவர்களின் சந்ததியார்கள்

இராணுவ விஷயங்களில் இவ்வளவு நம்பிக்கையும், தோழமையும், ஒத்துழைப்பும் காணும்போது உள்நாட்டு நிர்வாகத்திலும் தினசரி வாழ்க்கையிலும் பொதுமக்களிடையே இன்னும் எவ்வளவோ அளவளாவுதலை எதிர்பார்க்கலாம்; இதற்குச் சரித்திர உண்மைகள் சான்று பகர்கின்றன.

'அவர்களுடைய ஆட்சியில் ஹிந்துக்களை வேலைக்கு வைத்துக்கொள்வது அவசியமாயிற்று. மஹமது கஜினி ஹிந்து துருப்புகளை ஏராளமாக வைத்திருந்தான். மத்திய ஆசியாவிலும் சென்று அவர்கள் போர் புரிந்தார்கள். அவனுடைய ஹிந்துச் சேனாதிபதி திலகர், மற்றொரு படைத்தலைவனான நியால்டிஜின் என்ற முஸ்லிமை அடக்கினான். குத்புதீன் இந்தியாவில் தங்குவது என்று தீர்மானித்ததும் உள்நாட்டு நிர்வாகம் செய்துவந்த ஹிந்து உத்தியோகஸ்தர்களை அப்படியே வைத்துக்கொண்டான். அவர்களில்லாமல் வரி வசூல் உள்பட ராஜ்ய நிர்வாகம் ஒன்றும் நடைபெறாது. முஸ்லிம்கள் இந்தியாவிற்கு வெளியிலிருந்து தொழிலாளிகளையும், கணக்குப்பிள்ளைகளையும், குமாஸ்தாக்களையும் தங்களுடன் கொண்டுவரவில்லை. அவர்களுடைய கட்டிடங்கள் ஹிந்துக்களால் கட்டப்பட்டவை இக்கொற்றர்கள் பழைய விதிகளைப் புதிய நிலைமைகளுக்கேற்றவண்ணம் மாற்றிக் கொண்டார்கள். முஸ்லிம் அரசர்களுடைய நாணயங்களை ஹிந்துப் பொற்கொல்லர்கள் செய்தார்கள். அவர்களுடைய கணக்குகள் ஹிந்து அதிகாரிகள் கையிலிருந்தன. ஹிந்துச் சட்ட விஷயங்களைப் பிராமணச் சட்ட அறிஞர்கள் எடுத்துக் கூறினார்கள். அவர்களுடைய எல்லாக்காரியங்களிலும் பிராமண ஜோஸியர்கள் உதவி செய்தார்கள். 'முதல் இப்ராஹீம் அடில்ஷாவின் (கி. பி. 1534-1557) குறிப்பிடத்தகுந்த காரியம் என்னவென்றால் சர்க்கார் கணக்குகள் யாவும் பாரஸீகத்தில் எழுதப்படாமல் ஹிந்தியிலேயே எழுதப்பட்டன. கணக்கு வேலைக்கு அநேக பிராமணர்கள் அமர்த்தப்பட்டார்கள். அவர்களுக்கு அரசாங்க நிர்வாகத்தில் மிகுந்த செல்வாக்கு இருந்தது. யூசுப் அடில்ஷா ஆட்சி புரியும்போது வரி வசூல் இலாகாவில் ஹிந்துக்கள் மிகுந்த அதிகாரமுள்ளவர்களாக இருந்தார்கள்.

சுல்தான் முஹமது துக்ளக்' தன்னிடம் அநேக ஹிந்துக்களை உத்தியோகத்தில் அமர்த்தியிருந்தான். நிதி இலாகாவில் ரத்தன் என்ற ஒரு ஹிந்து உயர்ந்த உத்தியோகத்திலிருந்தார். அக்பருடைய நிதி வருமான இலாகா மந்திரி புகழ் பெற்ற ராஜா தோடர்மால் தமது நிர்வாகத்தில் நீடித்து நிற்கும் பல மாறுதல்களைச் செய்தார்; அரசாங்க உத்தியோகஸ்தர்களில் மிக மேலானவர்களில் ஒருவராகக் கருதப்பட்டார். ஔரங்கசீப்பினுடைய நிதி மந்திரி ராகநாதன் என்ற ஒரு ஹிந்துவாவார்.

தற்காலத்திலும் இந்திய சமஸ்தானங்களில் ஹிந்துக்களும் முஸல்மான்களும் உயர்ந்த உத்தியோகங்களில் நியமிக்கப்படுகிறார்கள். அவர்களுடைய மதத்தைப்பற்றிய பேச்சே கிடையாது. ஹைதராபாதில் உள்ள மகாராஜா ஸர் கிஷன் பிரஸாதையும் முன்பு மைசூரிலிருந்து இப்பொழுது ஜெய்ப்பூரில் இருப்பவருமான ஸர் மஹமது இஸ்மாயிலையும் குறிப்பிட்டால் போதுமானது.

"இந்தியா பிரிக்கப்பட்டால்.........."

பாபு ராஜேந்திர பிரஸாத்.

(பாக்கி அடுத்த இதழில்)

நமது ஏஜண்டுகள்:—

ஸிலோன் முழுவதற்கும்
'ஆஸாத்' ஏஜெண்ட்
மெஸ்ஸர்ஸ்
எம்மல் & கோ.,
ஜெனரல் மர்ச்செண்ட்ஸ் & கமிஷன் ஏஜெண்ட்ஸ்
காம்போலா,
ஸிலோன்.

WHOLE CEYLON AGENCY.
FOR
"AZAD"
EMMEL & Co.,
General Merchants & Commission Agents,
GAMPOLA, (CEYLON)

P. S முகம்மது மைதீன் சாகிப்,
ஷம்ஸுல்ஹுதா முஸ்லிம் சங்கம்,
அல்லிமுப்பன் தெரு, கடையநல்லூர்

M. S. M. கனி,
மரம், ஓடு வியாபாரம்,
கோபிசெட்டிப்பாளையம்.

E. V. K. மீரான் சாஹிப்,
சத்திர தெரு, கல்லிடைக்குறிச்சி.

ரா கணபதி,
C/o M. S. முனிசாமி,
ஈஸ்வரய்யர் சந்து,
மெயின் ரோடு, திண்டுக்கல்.

M. சுலேமான் சாகிப்,
சுலேமான் ஸ்டோர், பாலக்காடு.

முகம்மது சாலீஹ் சாஹிப்,
சாலீஹ் & ஸன்ஸ்,
எடத் தெரு, நாகப்பட்டிணம்.

P. K. E. அப்துல்லா,
லத்தீப் பில்டிங்ஸ்,
ஆஸாத் தெரு, வலங்கைமான்.

பீ. மீரா மொய்தீன் சாகிப்,
ரெங்கோன் ஹால், காரைக்குடி.

S. S. முகம்மது இப்ருஹிம் மரைக்காயர்,
"ஆஸாத் ஸ்டோர்"
கடைத்தெரு, அதிராம்பட்டணம்.

G. அப்துல் லத்தீப்,
மணியக்காரத்தெரு, திருச்சி.

'ஆஸாத்'
பணத்தை வைத்துக்கொண்டு கொடுக்காமலிருக்கும் ஏஜண்டுகளின் பெயர்கள் பணம் கொடுக்கும் வரை வாரந்தோறும் இங்கு வெளியிடப்படும்.

ஏஜண்டு பெயர்:
அப்துல் சலாம், ஈரோடு.

Printed by V. JAYARAM at his Sri Rama Printing Works, 129, E. Kadalangudi St., Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.